உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 29 | சௌமிய – மாசி – 10 – 3 – 70 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே,

–சம்பந்தர்

## அருளொளி

உலகம் மாற்றங்களை உடையது. என்றும் ஒருபடித்தாய் இருப்பதன்று. "மாற்றமாம் வையகம்" என்பது மணிவாசகர் வாக்கு. இந்த மாற்றங்கள் பலவும் காலத்தின் வழிப்பட்டு உண்டாகின்றவை. எனவே, உலகிற்குச் சிலகாலம் வெயில்; சிலகாலம் மழை; சிலகாலம் பனி. மீண்டும் சிலகாலம் வெயில்; சிலகாலம் பனி. இவ்வாறாகக் கால சக்கரம் பலவாறாகச் சுழன்று செல்கின்றது. இன்னும் ஒரு நாளிலே சிறிதுநேரம் பகல். சிறிதுநேரம் இரவு. பகல் என்பதிலும் சிறிது காலம் காலை; சிறிதுகாலம் மாலை. இப்படியே உலகிற்குச்

சிலகாலம் வாழ்வு; சிலகாலம் தாழ்வு. இன்னும், 'உலகம் முழுவதற்குமே தோற்றம் ஒருகாலம்; நிலைப்பு ஒரு காலம்; ஒடுக்கம் ஒருகாலம் என்று சாத்திரங்கள் கூறு கின்றன. இத்தகைய காலத்தில் அகப்படாது அதனைக் கடந்தவர் யாவர்? ஒருவருமில்லை. என்றாலும், காலத்தையும் தோற்றுவித்து ஒடுக்கி, அதனைக் கடந்து நிற்பவன் ஒருவன் உளன். அவன்தான் கால காலனாகிய சிவபெருமான், ஆகவே, அப்பெருமானை அடைந்தவரே காலத்தைக் கடந்து என்றும் ஒருபெற்றியராய் வாழ்வர். அங்ஙனம் வாழ்வதற்கு முதற்கண் அவனது அருளொளியைப் பெறவேண்டும்.

உயிர்கள் யாவும் இறைவனது அருளொளியைப் பெறவேண்டும் என்று கூறுவதிலிருந்து, அவைகள் இருளில் உள்ளன என்பது புலனாகும்.

> "இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள்நீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு"

> "இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்று திருவள்ளுவரும் உயிர்கள் இருளில் கிடத்தலையும், அவை இறைவனது அருளொளியால் இருளினின் றும் நீங்கி இறைவனை அடைந்து இன்புறல் வேண்டும் என்பதையும் குறிப்பித்துள்ளார்.

உயிர்களுக்கு உள்ள இருள், கண்ணை மறைக்கும் புற இருள் போன்றதன்று; அறிவையே மறைக்கும் அக இருள். இஃது அவைகட்கு இன்று, நேற்று வந்ததன்று; பண்டே உள்ளது. அதனை நீக்குவதற்கே இறைவன் உலகத்தையும், பலவகை உடம்புகளையும் படைக்கின்றான்; காக்கின்றான். உலகமும், உடம்பும் உயிர்களுக்குக் கைவிளக்குப்போல உதவுவன. அவற்றிற்கிடையே அவை இறைவனது அருளொளியாகிய

பேரொளிப் பிழம்பினைப் பெறுதல் வேண்டும். அவ்வாறு பெறுதற்குச் செய்யும் முயற்சியே தவம் எனப்படும்.

பலவகைப்பட்ட தவங்களில் விரதம் ஒன்று. விரதம் அல்லது நோன்பு என்றுமே பொதுவாக இருக்கத்தக்க தாயினும் குறிப்பிட்ட சில நாட்கள் விரத தினங்கள் எனச் சிறப்பாக அமைந்துள்ளன. அவைகளில் இறைவனது அருளொளியை நினைந்து இருள் நீங்கி இன்பம் பெறுதற்குரிய சிறந்த ஒரு விரதநாளே சிவராத்திரி. இஃது உலகம் எல்லாம் ஒடுங்கிய பேரிருட் காலத்தில் இறைவன் மீண்டும் உலகத்தைத் தோற்றுவித்தற் பொருட்டு உமையம்மைக்குத் தனது வடிவத்தைப் பேரொளிப் பிழம்பாகக் காட்டி வழிபடச் செய்த நாள் என்றும், படைப்புக் காலத்தில் பிரமனுக்கு உண்டாகிய செருக்குக் காரணமாக அவனுக்கும், திருமாலுக்கும் நிகழ்ந்த போரினிடையே சிவபெருமான் ஒளிப்பிழம்பாய் வந்து நின்று, அதன் அடிமுடியைத்தேடி அறியாது நின்ற அவர்கட்குப் பின்னர் அவ்வொளியினின்றும் வெளிப்பட்டு அருள் புரிந்த நாள் என்றும் புராணங்கள் கூறும்.

இன்னும், உமாதேவியார் விளையாட்டாகச் சிவபெருமானது கண்களை மூடியகாலத்தில் உலகமெல்லாம் பேரிருளில் மூழ்கிவிடச் சிவபெருமான் அவ்விடர்ப்பாட்டினை நீக்குதற் பொருட்டு நெற்றிக்கண்ணைத் திறந்து ஒளிகொடுத்த நாள் என்பதும் மரபு. இவையெல்லாம் எதனைக் காட்டுகின்றன? இறைவனது அருளொளியை நினைந்து வழிபடுதற்குரிய சிறந்த நாள் சிவராத்திரி தினம் என்பதையும், இறைவன் அருளொளி வடிவமாய்த் திகழ்வது இலிங்கத் திருமேனி என்பதையுமே காட்டுகின்றன.

பிரம விட்டுணுக்களுக்கு மேற்கூறியவாறு இறைவன் ஒளிவடிவாய்த் தோன்றியது மாசிமாதம் அபரபக்கம் சதுர்த்தசி என்று சொல்லப்பெறுவதால், அந்தநாளே

சிவராத்திரி தினமாக விளங்குகின்றது. மாதந்தோறும் வருகின்ற அபரபக்கச் சதுர்த்தசிகளும் சிவராத்திரி யாகையால், மேற்குறித்த நாளே மகாசிவராத்திரியாகும். இந்நாளில் இரவு நான்கு யாமங்களிலும் மக்கள் சிவ பூசையைச் சிறப்பாகச் செய்தல் வேண்டும். நான்கு யாமங்களில் இரண்டாம் யாமமே இலிங்கோற்பவ காலம். அதனால், அது மிகச் சிறப்புடையதொன்று. சிவபூசை இல்லாதோர் நான்கு யாமங்களிலும் சிவாலயங்களில் சென்று சிவதரிசனம் செய்தல் இன்றியமையாததாகும். அன்று பகல், இரவு முழுதும் உண்டியும், உறக்கமும் இன்றிச் சிவவழிபாட்டில் ஈடுபட்டிருந்து, மறுநாட் காலை பாரணம் செய்தல் இருள் நீங்கி அருளொளி பெறுதற்கு ஏதுவாகும். அவ்வாறு இருக்க இயலாதவர் இயன்ற அளவு அவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞானமாகிய அருளொளியை இறைவன் உயிர்கட்கு வழங்கி யருளும் இம்மகாசிவராத்திரி தினம், அண்மையில் வந்தபொழுது தருமையாதீனத்தில் ஆதீன ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருமுன்பும், ஸ்ரீ ஞான புரீசுரர், ஸ்ரீ தருமபுரேசுவரர் திருக்கோயில்களும் சோதி சொரூபமாய் விளங்கியதையும், நான்கு யாமங்களிலும் அளவற்ற சிறப்புடன் அபிடேக அலங்கார தீபாராதனை களாகிய வழிபாடுகள் நடைபெற்றதையும் அன்பர்கள் கண்டு இறைவன் அருளொளியில் மூழ்கித் திளைத்தனர். ஆதீனக் கோயில்கள் பலவற்றிலும் இத்தகைய காட்சி கள் ஆங்காங்குள்ள அன்பர்களுக்கு அருளொளியை வழங்கி அகமகிழ்வித்தன. மற்றும் எங்குமுள்ள பல சிவாலயங்களிலும் இவ்வாறு இறைவன் இம்மகாசிவராத் திரி தினத்தில் தனது பேரருட் பேரருளினை அன்பர் கட்கு வழங்கி இன்பத்தில் திளைத்திருக்கச் செய்தமை சிறந்த திருவருட் பேருகும். இச்சிவராத்திரி தினத்தில் பெற்ற அருளொளியை நாம் அன்றுமட்டும் அன்று; என்றும் மறவாதிருந்து இன்பம்பெற்று உய்வோமாக.

உ
குருபாதம்

குருவருள்

# அருள்நெறியும் அறநெறியும்

## செம்பொருட் காட்சி

நாம் புறப்பொருள்களை அறியுமிடத்து மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள் வழியாக ஊறு, சுவை, உருவம், மணம், ஓசை என்னும் ஐம்புலன்களாக அறிகின்றோம். என்றாலும், கண் என்னும் பொறி வழியாகப் அதன் உருவத்தை அறியாமல், பிற பொறிகள் வழியாகப் பிற புலன்களை மட்டும் அறிந்தால், பொருளை அறிந்ததாக நமக்குத் தோன்றுவதில்லை. உதாரணமாக ஒரு மாம்பழத்தின் உருவத்தைக் கண்ணால் காணாமல், அதன் ஊறு, மணம், சுவை என்பவற்றை அவற்றிற்குரிய பொறிகளால் அறியினும், மாம்பழத்தை அறிந்ததாக நமக்கு மனநிறைவு உண்டாவதில்லை. அதனால், அவ்வாறு அறிந்த மாம்பழத்தைக் கண்ணால் காணுதல் வேண்டும் என்னும் ஒரு பேரவா நம் உள்ளத்தில் எழுகின்றது. இனி, ஒரு மாம்பழத்தைக் கண்ணால் மட்டும் கண்டு, பிற பொறிகளால் அறியாவிடினும், அப்பொருளை அறிந்துவிட்டதாக நாம் மனநிறைவு பெறுகின்றோம். ஆகவே, புறப்பொருளை அறியும் அறிவுகளில் கண்ணால் அறியும் அறிவே சிறந்தது என்பது தெளிவு. இதனால்தான் 'காட்சி' என்பது கண்ணால் காண்பதற்கு மட்டுமே உரிய பெயராய் இருப்பினும், அதனை ஏனைய பொறிகளால் உறுதல், சுவைத்தல் முதலியவற்றிற்கும் உரிய பெயராகச் சில வேளைகளில் சொல்லப்படுகின்றது. பொறிகளுக்கு அகப்படக் கூடிய பொருளை, 'காட்சிப் பொருள்' என்று கூறும் வழக்கமே இதற்குப் போதிய சான்றாகும்.

இனி, 'காட்சி' என்பது இவ்வாறு பருப்பொருள்களை ஐம்பொறிகளால் அறிதற்குப் பெயராய் வழங்குதலேயன்றி, நுண்பொருள்களை அறிவால் அறிதற்கும் உரிய பெயராய்

வழங்குதல் அறியத்தக்கது. 'புன்மையில் காட்சி, நடுக்கற்ற காட்சி, மாசறு காட்சி' என்றெல்லாம், அறிதலே, 'காட்சி' என்று திருவள்ளுவர் பல இடங்களில் கூறுதல் காணலாம். அறிதல், 'காட்சி' எனவே, அறிவு, 'கண்' ஆதல் தானே பெறப்படுகின்றது.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்!
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

என்று திருமூலரும் கூறுவதைப் பார்க்கின்றோம். உடம்பிற் பொருந்தியுள்ள கண்ணை, 'ஊனக்கண்' என்றும், உயிரில் பொருந்தியுள்ள அறிவை, 'ஞானக்கண்' என்றும் கூறும் வழக்கத்தை யாவரும் அறிவர்.

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினில் சிந்தை நாடி"

என்று மெய்கண்டாரும் வேறொரு வகையில் கூறினர். ஆகவே, பருப் பொருள்களைக் காணும் பொறிக்காட்சியிலும், நுண்பொருளைக் காணும் அறிவுக் காட்சியே சிறந்தது என்பதும், அவ்வறிவுக் காட்சி இல்லாதோர், புறக் கண் இருப்பினும் கண்ணில்லாதவராகவே கருதப்படுவர் என்பது விளங்கும். இதனைத் திருவள்ளுவர்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று குறிப்பாற் கூறுகின்றார்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்று கூறும் முகத்தால் கல்வியை, 'கண்' என்று கூறிய திருவள்ளுவர், அக்கல்வியை நல்லாசிரியரை அடுத்து, "உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்று" நின்று கற்கவேண்டும் எனக் கூறினர். ஆகவே, ஞானக் கண் அல்லது அறிவுக் கண்ணைத் தருபவர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பது தெளிவாகும்.

கல்வியால் பெற்ற அறிவுக் கண்ணைக் கொண்டு காணும் அறிவுக் காட்சிகள் எண்ணிறந்தன. அவையாவும், 'இன்பம், பொருள், அறம்' என்னும் முத்திறத்துள் அடங்குவனவாம்.

அவற்றுள் இன்பக் காட்சியாவது, கண்முதலிய பொறிகளின் வழிப்பொருள்களைக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறிந்து பெறும் உலக இன்பங்களை அறிதல். பொருட் காட்சியாவது, இன்பத்தைத் தரும் பொருள்கள் இவை எனவும், அவற்றைப் பெறும் வழிகள் இவை எனவும், பெற்றபின் அவற்றைப் பாதுகாக்கும் முறைகள் இவை எனவும் அறிதலாம். அறக் காட்சியாவது, 'இன்பமும், அதற்குக் காரணமான பொருளும் அறத்தின்வழி அமைவனவேயன்றி, அறமின்றி அமையா' என அறிந்து, 'அவற்றைத் தரும் அறங்கள் இவை' எனவும், 'அவற்றைச் செய்யும் முறைகள் இவை எனவும் அறிதலாம்.

இம்மை, மறுமை உலகங்களில் உள்ள பொருள் இன்பங்களைத் தரும் அறக் காட்சியின் முதிர்ச்சியில், அவ்வறத்தின் பயனாகக் கிடைக்கும் பொருள் இன்பங்கள் நிலைபேறுடையனவாய் இல்லாமல், சகடக் கால்போலச் சுழன்றோட, வறுமை, துன்பம் என்பனவும் ஒருதலையாக உடன்நிகழ்தல் விளங்கும். அது விளங்கவே, நிலைபேறுடைய பொருளைப் பெற்று, அதனால் விளையும் நிலைத்த இன்பத்தைப் பெற அவா உண்டாகும். மாற்றம் இன்றி என்றும் ஒருபெற்றியாய் நிற்கும் பொருளே மெய்ப்பொருள் எனப்படும். மெய்ப்பொருளையும், அதன் இன்பத்தையும் பெற அவா உண்டாயபொழுது, அவ் இன்பத்தைப் பெறும் வழியை அறிவிக்கும் ஆசிரியரை அடையும் வேட்கை மிகும். அது மிக, அவரை அடைந்து பெறும் அறிவுக்காட்சியே மெய்ப்பொருளையும், அதன் இன்பத்தையும் தருவதாகும். இதனையும், 'துறவறம்' என அறத்தின் ஒருபகுதியாக உலகியல் நூல்கள் கூறினும், வீட்டு நூல்கள் இதனை 'ஞானம்' என வேறுவைத்துக் கூறும். எனவே, இம் மெய்ப்பொருளைக் காணும் அறிவுக் கண்ணே உண்மையான அறிவுக் கண் என்பதும், இந்த அறிவுக் கண்ணால் காணும் மெய்ப்பொருட் காட்சியே உண்மையான அறிவுக் காட்சி என்பதும், இவ் அறிவுக் காட்சியைப் பெறுதலே மக்கட் பிறவியின் மாண்புறு பயன் என்பதும் புலனாகும். மெய்ப்பொருளே 'செம்பொருள்' என்றும் சொல்லப்படும்.

கல்வியாகிய கண் அதனைக் கற்பிக்கும் ஆசிரியர் இன்றி அமையாதது போல, ஞானமும் அதனை உள்ளவாறு உணர்த்தும் ஆசிரியர் இன்றி அமையாது. அதனால் ஆசிரியர்

அருளுரையின்வழி அறிவுக்கண் பெற்றுச் செம்பொருளைக் காணும் காட்சியைப் படிப்படியாகப் பெறுதல் வேண்டும். அப் படிகள், 'கேட்டல், சிந்தித்தல், தெளிதல், அழுந்தல்' என நான்கு வகையாக அமையும். அழுந்துதலே, 'நிட்டை' எனப்படுகின்றது.

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை
 கிளத்தல்என ஈரிரண்டாம் கிளக்கில் ஞானம்
வீட்டை அடைந்திடுவர் நிட்டை மேவினோர்கள்
 மேவாது தப்பினவர் மேலாய பதங்கட்கு
ஈட்டியபுண் ணியநாத ராகி இன்பம்
 இனிதுநுகர்ந் தரனருளால் இந்தப் பார்மேல்
நாட்டியநற் குலத்தினில்வந் தவதரித்துக் குருவால்
 ஞானநிட்டை அடைந்தடைவர் நாதன் தாளே."

என்பது சிவஞான சித்தி. இதில் 'நிட்டை' என்னும் அழுந்துதற் காட்சி ஒன்றே பிறவாமையைத் தரும் என அறுதியிட்டுக் கூறியிருத்தல் காணலாம்.

"விழுப்பமும் கேள்வியும் மெய்ந்நின்ற ஞானத்
தொழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விடாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே."

எனத் திருமூலரும் அருளினர்.

திருவள்ளுவரும் செம்பொருட் காட்சி நான்கு படிநிலைகளாக நிகழும் எனக் கூறியிருத்தல் அறியத்தக்கது.

"கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி,

ஓர்த்துள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு,

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் "

என்னும் நான்கு குறள்களும் கேட்டல் முதலிய நான்கையும் முறையே குறிப்பன. பரிமேலழகர் வைதிக முறையையே பின்பற்றி மேற்காட்டியவற்றுள் முதல் மூன்று குறள்களையே கேள்வி, விமரிசம், பாவனை என்பவற்றைக் கூறுவனவாகக் குறித்தாராயினும், திருவள்ளுவர் கருத்து மேற்கூறியவாறு அமைந்ததே என்பதைப் பின்வரும் திருக்களிற்றுப்படி வெண்பா நன்கு விளக்கும்.

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமுமாம் ; - சார்பு
கெடஒழுகின் நல்ல சமாதியுமாம் ; கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று.

மேற்குறித்த குறள்களில் "கற்று" என்றது, 'கேட்டு' என்னும் பொருளதே. ஓர்த்தல் - ஆராய்தல். இது சிந்தித்தலே என்பது வெளிப்படை. காண்டல்-பெறுதல். இதுதெளிதலேயன்றிப் புதிதாகப் பெறுதலன்று. பிற சார்புகள் கெடத் தனக்கு என்றும் சார்பாயுள்ள பொருள் ஒன்றையே உணர்ந்து ஒழுகுதல், அழுந்துதல் என்னும் நிட்டையே. ஆகவே, சிவதரிசனத்தின்பின் சிவயோகம் பெற்றுச் சிவபோகத்தை அடைதலே மானுடப் பிறவியின் பயன் எனக் கூறும் அருள்நெறியே அறநெறியிலும் மெய்ப்பொருள் காண்டல், உள்ளது உணர்தல், செம்பொருள் காண்டல், சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகல் எனக் கூறப்படுகின்றது என்பதை மக்கள் அனைவரும் உணர்ந்து நற்பயன் பெறுவார்களாக.



ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானை
அங்காரகன் பூசித்து நோய் நீங்கப் பெறுதல்

# காத்துக் கிடந்தேன்!

## வேலன்

எடுப்பு

காத்துக் கிடந்தேனடி — தோழி
காத்துக் கிடந்தேனடி (கா)

தொடுப்பு

பூத்த குளத்தருகே பூவைக் குரல்கேட்டே
கூத்தர் வருவாரென்று கோடித் தவமிருந்து (கா)

முடிப்பு

காற்றின் மிதந்துவரும் காவிய ஓசையுடன்
கன்னல் குழலொலியும் கேட்டு மயங்கிநின்றேன்
வேற்றவர் இல்லாத வேளையில் எனைநெருங்கி
வேதனை செய்துசென்ற வீரர் வருவாரென்றே (கா)

காலமும் வந்தது காற்றும் இணைந்தது
கானம் செழித்தது கார்முகில் பெய்தது
கோலம் தழைத்தது கூத்தரின் வருகை
கோரிக் கிடந்தே உள்ளமும் நைந்தது. (கா)

---

## விசேஷ நாட்கள்

### 14—3—70 முதல் 13—4—70 முடிய

| | |
|---|---|
| 18—3—70 | முனையடுவார் நாயனார் திருநக்ஷத்திரம் |
| 20—3—70 | பிரதோஷம் |
| 22—3—70 | பங்குனி உத்திரம் |
| 26—3—70 | காரைக்காலம்மையார் திருநக்ஷத்திரம் |
| 3—4—70 | தண்டியடிகள் நாயனார் திருநக்ஷத்திரம் |
| ,, | பிரதோஷம் |
| 9—4—70 | வேலூர்க் கிருத்திகை |
| 10—4—70 | நேச நாயனார் திருநக்ஷத்திரம் |
| 12—4—70 | கணநாத நாயனார் திருநக்ஷத்திரம் |

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான், முதுபெரும்புலவர்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 29, இதழ் 3, பக்கம் 148 இன் தொடர்ச்சி)

## ஞானச் செய்திகள்

மாணக்கன் : 'ஞானம் பெற்றோர் உடம்பு நீங்கியபின் பெறுதற்குரிய பேரின்பத்தை உடம்புடன்கூடி யிருக்கும் பொழுதே பெறுவதுதான் சீவன்முத்தி' என்றால், அதுவே இவ்வுலகில் மக்களாய்ப் பிறந்தோர் அடையும் பயன்களில் முடிந்த பயன் என்பது விளங்குகின்றது. ஆயினும், குருவருளால் ஞானம் வரப்பெற்றோர் அனைவரும் அந்நிலையை அடைந்துவிட்டதாகத் தெரியவில்லையே; அதற்குக் காரணம் யாது ?

ஆசிரியர் : சாதன இயலில் முன்பே சொல்லப்பட்ட ஞானத்தின் படிநிலைகளே காரணம். அவை, ஞானத்திற் சரியை' ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்பன என்றும், அவை முறையே குருவுபதேசத்தின் வழி' சிவமுதற் பொருளே ஏனை எல்லாப் பொருட்கும் பற்றுக்கோடு எனக் கேட்டல், பின் அதனை நூல்களும், பொருந்துமாறும் பற்றிச் சிந்தித்தல், பின் அதுவே உண்மை என ஒருதலையாகத் துணிதல், பின் பிற பற்றுக்கள் அற்று அச்சிவத்தில் அழுந்துதல் என்றும் கூறினேம். அவற்றுள் இறுதியிற் சொன்ன அழுந்துதல் என்னும் நிட்டை நிலையாகிய, 'ஞானத்தில் ஞானம்' என்னும் நிலையே சீவன்முத்தி நிலை. உயிர்கள்தோறும் ஆணவமலப் பிணிப்பு ஒருவகையாக இல்லாமல் வெவ்வேறு வகையாய் இருத்தலால், அதன் பரிபாக நிலையும், அதற்கேற்ப நிகழும் சத்திநிபாத நிலையும் பல்வேறு வகையாகவே இருக்கும். ஆகவே, குருவருளால் ஞானத்தைக் கேட்டல் என்னும் அளவில் பெற்ற உடனே எல்லார்க்கும் நிட்டையாகிய சீவன் முத்தி நிலை வந்துவிடுவதில்லை. அதன்பின் சிந்தித்தல், தெளிதல்கள் நிகழ்ந்தபின்பே அது வருவதாகும். இனிச் சிந்தித்தல்

தெளிதல்களும் எல்லார்க்கும் ஒரு பெற்றியே நிகழ்வதில்லை; பல்வேறு வகைப்பட மந்தமாகவும், தீவிரமாகவும் நிகழும். அவ்விடத்து, 'அதிதீவிரத்தில் அதிதீவிரம்' என்னும் நிலை வரும் பொழுதுதான் நிட்டையிலே நிற்றலாகிய சிவன்முத்திநிலை கூடுவதாகும். அதிதீவிரத்தில் அதிதீவிரமான தமது நிலையையே மாணிக்கவாசகர், "விடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்" எனக் குறிப்பிட்டார். இந்நிலை பலருக்கு இல்லாமையால்தான் பலர் குருவருளைப் பெற்றபின்பும் சிவன் முத்திநிலையை எய்தாதவராய் இருக்கின்றனர். மாணிக்கவாசகருங்கூட, முதலில் தமக்கு இந்நிலை வாய்க்கவில்லை என்பதை,

"வழங்குகின் றாய்க்குன் அருளா ரமுதத்தை
வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன் விக்கினேன் வினையேன்என்
விதியின்மையால்"

என்று குறிப்பிடுகின்றார். ஆகவே, இந்நிலை வாய்த்தல் என்பது அரிதினும் அரிது.

மாணாக்கன்: ஞானத்தின் படிநிலைகள் மேற்கூறிய நான்கு தானோ? மற்றும் எவையேனும் உளவோ?

ஆசிரியர்: மேற்கூறிய நான்குதான்; வேறில்லை என்றாலும், அந்த நான்கினையே வேறொருவகையில் பத்தாகப் பகுத்து, 'தசகாரியம்' எனக் குறிப்பிடுவர். இத் தசகாரியம், 'ஞானச் செய்தி' என்று சொல்லப்படும்.

மாணாக்கன்: அங்ஙனமாயின் அவை பத்தினையும் அடிகள் விளக்கியருளுதல் வேண்டும்.

ஆசிரியர்: 'ஞானம்' என்பதற்கு 'அறிவு' என்பதே பொருளாயினும், தத்துவ நூல்களில் அது, பொருளியல்பை உள்ளவாறுணரும் உணர்வுக்கே குறியீடாக வழங்கும். அறிதல் என்னும் அளவில் சரியை, கிரியை, யோகம் என்பனவும் ஞானமேயாயினும், சைவ சித்தாந்தம் அவைகளை ஞானம் என்னாது பொருளியல்பை உள்ளவாறுணரும் உணர்வையே - தத்துவ உணர்வையே, 'ஞானம்' எனச் சிறந்தெடுத்துக் கூறுதல், மேற்கூறிய கருத்துப் பற்றியேயாம்.

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே"

என்று தாயுமானவர், சரியை முதலியவற்றையும், 'மெய்ஞ்ஞானம்' என்றது, மெய்ப்பொருளை ஒருவாற்றான் அறியும் போதுமை பற்றியாம்.

பொருள்களின் எண்ணிக்கை, அவற்றின் இயல்பு, அவற்றிடையே உள்ள தொடர்பு, அவற்றின் நிலைவேறுபாடுகள் முதலியவற்றை ஒவ்வொரு மதமும் ஒவ்வொருவகையாகக் கூறித் தான் கூறும் வகையில் அவற்றை அறிதலே உண்மை ஞானம் எனக் குறிப்பிட்டு, இந்த ஞானத்தினால்தான் முத்தி கிடைக்கும்; பிறவகை ஞானங்களால் முத்தி கிடையாது எனக் கூறும்.

பொருளியல்பு கூறுமிடத்து அவற்றின் நிலை வேறுபாடுகளுள் முத்தி நிலையைப்பற்றிப் பிறமதங்கள் கூறுவன பொருந்துவன அல்ல; சைவசித்தாந்தம் கூறும் முத்தியே உண்மை முத்தி என்பது முன்பேகூறினோம். ஆகையால், அதுகூறும் முறையில் பொருளியல்புகளை உணர்வதே உண்மைஞானமாகும்.

சைவ சித்தாந்தம் பொருளின் எண்ணிக்கை வகையால் மூன்று என்றும், அவற்றின் இயல்பு 'தடத்தம், சொரூபம்' என இரண்டு என்றும், அவற்றிடையே உள்ள தொடர்பு சுத்தாத்துவிதம் என்றும், நிலை வேறுபாடுகள் 'பெத்தம், முத்தி' என இரு திறப்பட்டுப் பிறிதோராற்றால், 'கேவலம், சகலம், சுத்தம்' என மூன்றாகி, ஒவ்வொன்றிலும், சாக்கிரம், 'சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்' என ஐந்தாய் மூவைந்து பதினைந்தாய் விரியும் என்றும் கூறுதலால், அவ்வாறு அவற்றை உணரும் ஞானமே சித்தாந்த ஞானமாம். இந்த ஞானமே கேட்டல் முதலிய நான்காமிடத்துப் பத்தாகி விரியும். அவை, 'தத்துவ ரூபம், தத்துவ தரிசனம் தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம், சிவ தரிசனம், சிவ யோகம், சிவ போகம், என்பனவாம்.

இவை பத்தும் உடற் செய்கைகளாகாது, அறிவுச்செய்கையாகிய ஞானச் செய்திகளேயாதலின், இவை அறிவின்கண் நிகழும் நிலைவேறுபாடுகளேயன்றி வேறல்ல. இங்குக் கூறப்பட்ட நிலைகளுள், 'தத்துவம், ஆன்மா, சிவம்' என்ற மூன்று பொருள்கள் கூறப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். அவை மூன்றும் முறையே

பாசம், பசு, பதி எனப்படுவன என்பதை நீ நன்கறிவாய். ஆணவம், மாயை, கன்மம் என்ற மூவகைப் பாசத்துள் மாயையின் காரியமாகிய தத்துவம் ஒன்றே இங்குச் சொல்லப்பட்டுள்ளது. அதனை, 'உலகம்' என்று பொதுவாகக் கூறலாம். என்றாலும், 'உலகம்' எனக் கூறினால் உடலையும், மனம் முதலிய பிற கருவிகளையும் அது தெளிவாக விளக்கமாட்டாது. அதனால், 'உலகம்' என்ற சொல் சொல்லப்படாமல் 'தத்துவம்' என்ற சொல்லே சொல்லப்பட்டுள்ளது. 'தத்துவம்' என்ற அளவிலே அவற்றின் காரியமாகிய தாத்துவிகங்களும் கொள்ளப்படுதல் மரபு.

மூவகைப் பாசங்களில் இம் மாயையை மட்டுமே கூறியது, அதுவே ஏனை எல்லாவற்றையும் விடப் பருப்பொருளாய் நின்று உயிரை மயக்கித் தனக்கு வேறாய் உள்ள பொருளை நோக்காது தன்னையே நோக்கித் தனக்குமேல் வேறொரு பொருள் இல்லை என்று எண்ணும் எண்ணத்திற்குக் காரணமாய் நிற்றல் பற்றியாம். ஆகவே, முப்பொருளின் இயல்பை உள்ளவாறுணரும் நிலை வேறுபாடே இங்கு, 'தசகாரியம்' எனப்படுகின்றது என்பது இனிது விளங்கும்.

இனி, தத்துவங்களைப் பற்றியும், ஆன்மாவைப்பற்றியும் கூறுமிடத்தில், 'ரூபம், தரிசனம், சுத்தி' என்னும் மூன்று நிலைகள் கூறப்பட்டிருத்தலைக் கண்டோம். அவற்றுள் 'ரூபம்' என்பது பொதுவாக (நிருவிகற்பமாய்) அறிதல் என்றும், 'தரிசனம்' என்பது ஐயமாக அறிதல் என்றும், 'சுத்தி' என்பது தெளிவாக அறிதல் என்றும் உணர்க.

சிவத்தைப் பற்றிக் கூறுமிடத்தில் சொல்லப்பட்ட ரூபம், தரிசனம் என்பவற்றிற்கும் இவையே பொருள். ஆயினும், தத்துவத்தைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும் தெளிவாக அறிதலை 'சுத்தி' என்று சொல்வதுபோலச் சிவத்தைத் தெளிவாக அறிதலை, 'சுத்தி' என்று சொல்வதில்லை. ஏனெனில், தத்துவத்தைப் பற்றியும், ஆன்மாவைப் பற்றியும், தெளிவாக அறிதலின் பயன், அவற்றால் வரும் மயக்கத்தினின்றும் நீங்குதலே யாமாகலின் அவை 'சுத்தி' எனப்படுகின்றன. சிவத்தைப் பற்றித் தெளிவாக அறிதலின் பயன் அதனை 'விட்டு நீங்காது அதன்கண் அழுந்தி இன்புறுதலே யாதலின், அது,சுத்தி' எனப்படுதல் இல்லை.

சிவம் 'தானும், தன் சத்தியும்' என இருகூறுபட்டு நிற்றலால், முதற்கண் சத்தியை அறிந்தே பின் சிவத்தை அறியும் நிலை உண்டாகும். அவற்றுள் சித்சத்தியைத் தெளிவாக அறியும் நிலையே 'சிவயோகம்' என்றும், சிவத்தைத் தெளிவாக அறியும் நிலையே 'சிவபோகம்' என்றும் சொல்லப்படுகின்றன. 'யோகம்' என்பதற்கு, 'ஒன்றுதல்' என்பதும், போகம் என்பதற்கு, 'துய்த்தல்' என்பதும் சொற்பொருள்களாகும். சத்தி, பொருளால் சிவத்தின் வேறாகாது அதன் பண்பேயாதலின், சத்தியை அறிதலை, 'சத்தி யோகம்' என்னாது, 'சிவயோகம்' என்றல் என்னை என்பது வினாவாகாமை அறிந்துகொள்க.

(தொடரும்)

---

# கூத்தாடும் திருவடிகள் வாழ்க

வேலன்

## எடுப்பு

கூத்தாடும் திருவடிகள் வாழ்க - மன்றிற்
கூத்தாடும் திருவடிகள் வாழ்க - அருட் (கூத்)

## தொடுப்பு

ஏத்தாத மறையில்லை எழுதாத கவியில்லை
எந்நாளும் பொன்னம்பலந் தன்னில் அருளொழுக (கூத்)

## முடிப்பு

கோயிலார் தில்லையில் வையகம் செழித்திட
குற்றமில் அடியவர் நற்றமிழ் தழைத்திட
தாயிலி யாகிய தண்மை விளங்கிட
தத்தோம் தித்தோம் தகுதித் தோமென (கூத்)

செந்தமிழ்த் தென்திசை திருமுக நோக்கி
செஞ்சடை விரித்திரு புறமுமே போக்கி
அந்தணர் பூசைகள் அன்பினைத் தேக்கி
அரகர அரகர எனுமொலி யாக்கிக் (கூத்)

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 29, இதழ் 3, பக்கம் 169ன் தொடர்ச்சி)

## 27. அங்கம் வெட்டினது

வேத கந்தரத்து முக்கண் வேதியன் மறையவன் செய்த மாபாதகத்தினேயே தவிர்த்து அருள்புரிந்தான். இனி தனது ஆசிரியனின் துணைவியை விரும்பித் தீமைபுரிந்த சீடனைத் தண்டித்த திருவிளையாடல் காண்போம்.

**வடிவு முதிர்ந்த வாளாசிரியன் :-**

குலோத்துங்க வழுதி நீதிதவருது ஞாலங்காக்கும் நாளில் கூடல் மாநகருள் வந்து ஒரு வேற்றுப் புலத்தவன் வாள் வித்தையைப் பலருக்கும் பயிற்றி அதில்வரும் வருவாய் கொண்டு வாழ்க்கை நடத்துகிருன். யாக்கை முதிர்ந்த அவ் வாசிரியன் அமணர் விடுத்த போதகந்தனைத் (யானை) தொலைத்த புண்ணியமூர்த்தி (22ம் திருவிளையாடல்) தாளில் நேயம் மிகக்கொண்டவன். கைவினை மறவாள் வித்தைக் காவலனுகிய அவனிடம் பகைவெல்லும் நோக்கோடு பலரும் வந்து பாடம் பயின்றனர். அவர்களுள் உய்யும் வகையறியா கீழ்மகன் ஒருவனும் இருந்தான். அவன் பெயர் சித்தன். ஆகூழின் வலிமையால் அவன் வாட்போரில் வன்மை மிகுதியும் பெற்ருன். தன் வல்லபமுணர்ந்து செருக்குற்ற அச் சித்தன் தன்னுசிரியனுக்கு நேராய் வேருய்த் தானுமோர் வாட்கூடமமைத்துப் பலருக்கும் பயிற்றுவிக்கத் தொடங்கினன்.

**ஆசைமிகுந்தது; அறிவு மயங்கியது :-**

வாட்படைப் பயிற்சியால் வருவாய் மிகவே தானெருவனே இருவர் வாளின் விருத்தியும் கொள்ளக் கருதினன்.

அதன்பொருட்டு அம்முதியவனிடம் வருகின்ற வீரர்களின் மனங்களைத் திரித்துத் தன்பால் திருப்பிக்கொள்கிறான். தாயை விரும்பிய மாபாவிக்கு இளையானோ இவன் என்று ஆசிரியர் வெறுத்துப் பேசுகிறார். அகழ்பவரையுந் தாங்கும் நிலம்போலப் பொறுமையைப் பூணக்கொண்ட ஆசிரியர் பிரானின் துணைவியிடம் அக்கயவன் சென்று இடனுண்டோ இடனுண்டோ என்று கேட்கிறான். மனை விளக்காம் அம்மாது இதனைக்கேட்டு வருந்தி செய்வதறியாது திகைக்கின்றாள்.

## மனக்காப்பும் மனைக்காப்பும் :-

பின்னொருநாள் ஆசிரியரின் மனைவி மாணிக்கமாலை இல்லில் தனித்திருந்த காலையில் சித்தன்சென்று மீண்டும் சமயமுண்டோ எனக்கேட்டான். யாரும் அங்கில்லை என வுணர்ந்து அம்மாதின் கரத்தினை வலிதிற்பற்றியீர்த்தான். அவளோ அத்தீயனின் எண்ணத்திற்கிடங்கொடாமல் அவனைக் கீழேதள்ளி வலிய கதவினைச் செறியச் சாத்தி தாழ்ப்பாளையும் போட்டாள். சமயம் தவறிவிட்டதே என்று காமத்தீ உள்வாட்டக் கயவனும் திரும்பிச் சென்றான்.

அறத்தின் கடைப்படியில் நிற்பவர்களுள் பிறன்கடை நின்ற பேதையைப்போல கடையர் யாருமே இல்லை. இப் பேதையின் செயலைத் தன்னுடலுக்குத் தலைவனான ஆசிரி யனிடம் கூறாமல் தன்னுயிர்த் தலைவனாகிய கூடல் நாயக னிடம் சொல்லி நைந்தாள். தாது அகம் நிறைந்த கொன் றைச் சடையவன்; எவ்வுயிர்க்குந் தானே போதகனாகித் தேற்றும் புண்ணியன்; புலைஞன் செய்த தீதினை அகங் கொண்டு தண்டிப்பதற்குச் சமயம் பார்த்திருந்தான்.

## நன்றியைக் கொன்றானின் நலங் கொன்றான் :-

மறுநாள் குற்றமற்ற குரவனின் வடிவுகொண்ட கொழி தமிழ்க் கூடல் வேந்தன், சித்தனைச் சென்றடைந்து 'சித்தா- காளையாகிய நீயும் கழிய மூப்படைந்த நாமும் வாளமராடி நாளை நம்தம் வலியளந்தறிவோமா என்று கேட்டார். அந் நாலாம் பாதகன் அதற்குடனே ஒருப்பட்டான். சித்தனிடம் பேசிவிட்டு சோமசுந்தரப் பெருமான் தங்கோயிலுக்குத் திரும்பும்போது ஆதவன் மேற்கடலுள் மூழ்கினன். உலகம்

இருண்டது. ஆசிரியனுக்கு வஞ்சகம் எண்ணுகின்ற பாவியின் பாவம்போல இருண்ட உலகில் வித்தை நிறைந்த ஆசான் அப்பாதகனின் திணியுடற் சிதைக்கத் தீட்டும் வாள்போல் கீழைக் கல்லிடைக் கதிரவன் முளைத்தான்.

" ஆசினன் குரவற் கின்னு வாற்றினேன் பாவம் போல
மாசிரு டிணிந்த கங்குல் வலிகெட வடிவாள் விஞ்சைத்
தேசிக னொருவ னன்னுன் திணியுடற் சிதைப்பத் தீட்டும்
காய்சின வாள்போற் கீழைக் கல்லிடை
முளைத்தான் வெய்யோன் "

நன்றியைக் கொன்று தின்ற அந்நயவஞ்சகன் கொற்றவையைக் கும்பிட்டு கச்சினை வீக்கிக்கட்டி, வடிவாள், பலகையோடு குரவன் சொன்ன களங்குறுகிவந்தான். வலியுடைய வாளமற்கு நென்னல்வந்து அறைகூவிய முதுபுலியேறன்ன முடக்கூடல் ஆசான் அக்கயவனெதிரே கழல்பூண்டு கையில் வாளும் பலகையும் பிடித்துத் தோன்றினர்.

அங்கம் சிதைத்தான் அருமறை தந்தான் :

அரியும் நரியும் மலைவதுபோல இருந்தது சித்தனுடன் சிவனியற்றிய போர். முடங்கல் பிறையும், முக்கண்ணும், நான்குதோளும், விடங்கலந்த மிடறும் தோன்ருதவாறு வந்த பெருமான் சித்தனை மெத்தவும் வருத்தினர்.

குரவனின் துணைவியை இந்த நெஞ்சுதானே நினைத்தது என்று கேட்டு அந்நெஞ்சைப் பிளந்தார். இந்தக்கரந்தானே அவளைத் தீண்டியது என்று அதனை வெட்டித் தள்ளினர். அவளைப் பேசிய நா, பார்த்த கண் என்று ஒவ்வொன்ருகச் சிதைத்து வீழ்த்திவிட்டுத் தன்னுருவை மறைத்துக்கொண்டார். அவ்வுறுப்புக்களைக் காக்க வழியில்லாமல் சித்தன் சிதைபட்டு மண்ணில் விழுந்தான்.

" குரத்தியை நினைத்த நெஞ்சைக் குறித்துரை
நாவைத் தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனைகோடியென்றென்
றுரைத்துரைத் தவற்றுக் கெல்லாம் உறுமுறை
தண்டஞ் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைத்து நின்ருன்"

சித்தனது அங்கம் சிதைத்த ஆசானை அதன்பிறகு காணாத அங்கு நின்றாரும் அவர் மாணவர்களும் அவரது இல்லம் வந்து அவர் எங்கேயென்று இல்லக்கிழத்தியைக் கேட்டார்கள். 'திருக்கோயிலுக்குச் சென்றுள்ளார்'-என்று அவள் கூறும்போது திரும்பிவந்த அவரைச் சூழ்ந்து கொண்டார்கள் அங்கு நின்றவர்கள். சித்தனைச் சிதைத்தபிறகு எங்கு சென்றீர்கள் என்ற அவர்களது வினவிற்கு அவரால் விடைதர இயலவில்லை. ஒன்றும் விளங்காது நான் இவ்வேலையைச் செய்யவில்லையே. என்னுருவில் இவ்வற்புதம் நிகழ்த்தினோரியாவர் என்று திருப்பிக்கேட்டார். அப்போது மாணிக்கமாலை தன்னிடம் சித்தன் நடந்துகொண்ட வகையைக்கூறி தான் எருதேறும் பிரானிடம் இறைஞ்சியதையுங் கூறினாள்.

## உய்வுகாட்டிய தெய்வமே! தேவர்தம் இறையே!

இந்த அம்மை அருளியபடியே அவரும் இக்கண்தானே பார்த்தது. இக்கரந்தானே தீண்டியது என்று கேட்டுக் கேட்டு அவனது அங்கங்களை வெட்டினர் என்று வந்தவர்கள் கூறினர்கள். அளவிறந்த வியப்போடு நேயம் நிறைந்த நெஞ்செதிரே கரங்களைக் கூப்பி ஆசிரியன் "அடியேன் பொருட்டு மதுரைப் பெருமானன்றோ இதனைச் செய்துள்ளார் என்று வணங்கி மனைவி, மாணவர்கள் பின்வர திருக்கோயிலுக்குச் சென்று 'நெடிய நான்முகனுந் தேரு நெறியயது சிறிய ஏழை அடியனேன் அளவிற்றே நின்னருள் விளையாடல் என்று அகம்மலர முகம்மலர்ந்து போற்றினான்.

இவைகளை எல்லாம் கேட்டறிந்த குலோத்துங்க பாண்டியன் மதுரைச் சொக்கன் 'பரதேசி காவலர்' ஆயினரென்று வாழ்த்தி ஆசிரியரையும் அவர்தம் துணைவியையும் யானைமேல் ஏற்றி நகர்வலஞ் செய்வித்தான். பின்பு அனந்தகுண பாண்டியனிடம் அரசைக் கொடுத்து பற்றறுத்து, அரவு உமிழ்ந்த மதிபோல மாசற்று மாறியாடும் பெருமானின் மலர்க்கழல்களடைந்து பேரின்பம் கொண்டான்.

(வளரும்)

# இந்திரன்

வேதாந்த சிரோமணி,

பிரமஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 29, இதழ் 3, பக்கம் 178ன் தொடர்ச்சி)

தாரகன் முதலிய அசுரரிடம் தோல்வியுற்று அசுரர்களுக்கு இழிவான குற்றேவல்களைச் செய்ததாகவும் ஸ்கந்தபுராணம் கூறும். தோல்வியடைந்தது மட்டுமின்றி ஒடிஒளிந்து கொண்டதாகவும் பல கதைகள் காணக்கிடக்கின்றன. தாரகாசுரனுக்குப் பயந்து எறும்பு உருவத்தில் இருந்து ஈசனைப் பூசித்தான் என்கிறது எறும்பியூர் ஸ்தலபுராணம். இந்திரனும் இந்திராணியும் புண்யகீர்த்தியின் புத்திரனாகவும் புத்திரியாகவும் ஆயினர் என்று கூறும் நாகைக்காரோண புராணம். அவ்வாறு அவர்கள் பிறப்பதற்கு இந்திராணிக்கு இந்திரனும், இந்திரனுக்கு இந்திராணியும் கொடுத்த சாபமே காரணம் என்றும் கூறும். சூரபத்மனுக்குப் பயந்து மூங்கில் புதரில் மறைந்து இருந்ததாக சீகாழி ஸ்தலபுராணம் சொல்லும்.

மேலும் பல முனிவர்களின் தபத்திற்கு இடையூறு செய்து அதனுல் துன்பமடைந்ததாகவும் காணப்படுகிறது. உதங்கர் என்ற முனிவர் அமுதம் வேண்டித் தவமியற்றினர். இந்திரன் நீசனுடைய உருவத்துடன் அவருடைய எதிரில் சென்று அமுதமளித்தான். நீசனிடம் அமுதம்பெற அவர் மறுக்கவே மறைந்தான். பிறகு அவரால் சபிக்கப்பட்டு செல்வம் இழந்தான் என்று பூவாளூர்ப் புராணம் கூறும். ஆசார்ய சாபத்தால் சண்டாளனுக ஆன திரிசங்குவிற்கு வசிஷ்டரிடம் உள்ள விரோதத்தின் காரணமாக விசுவாமித்திரர் சரீரத்துடன் சுவர்க்கத்திற்குத் திரிசங்குவை அனுப்பக்கருதி ஒரு வேள்வி செய்தார்; அந்த யாகத்தில் தேவர் ஹவிர்பாகம்பெற வராமலிருக்கவே, வேறு இந்திரனையும், சுவர்க்கத்தையும், தேவர்களையும், நக்ஷத்திரங்களையும் படைக்க முனிவர் ஆரம்பித்தார். பிறகு பயந்த இந்திரன் திரிசங்குவை நடுவிலேயே இருக்க அருளினுன். இவ்விதம் விச்வாமித்ர முனிவரிடம் கர்வபங்கம் அடைந்தான்.

தக்ஷயாகத்தில் வீரபத்திரனுக்குப் பயந்து குயிலாக ஓடி ஒளிந்தான். குயிலின் உருவத்தில் பூசித்த தலமே கருங்குயில்நாதன் பேட்டை என்றும் கூறுவர். மகாபலிக்குப் பயந்து தாமரைத் தண்டில் நெடுங்காலம் ஒளிந்திருந்தான். துர்வாச முனிவர் சிவபூசைசெய்து பிரசாதமாகக் கொடுத்த புஷ்பத்தை மதியாமல் அதை யானையின் தலையில் வைத்தான். யானை, கீழே தள்ளி மிதிக்கவே கோபங்கொண்ட முனிவரால் ஐராவதம் காட்டானையாயிற்று: இந்திரனும் உக்ரபாண்டியனுடன் மாறுகொண்டு, கடலை மதுரைமீது ஏவி அவனுடன் போருக்கு வந்து அவன் எறிந்த வளையால் முடி சிதறுண்டான் என்று திருவிளையாடல் புராணம் கூறும். இவ்வாறு வெற்றிவாகையுடன் கூடியவனாக வேதங்களில் வர்ணிக்கப்பட்ட இந்திரன் புராணங்களிலும் தல புராணங்களிலும் பல அசுரர்களிடமும், முனிவரிடமும் தோல்வியடைந்து கர்வபங்கமடைந்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் சத்யசிலனாகவும், நன்மையையே செய்பவனாகவும் உயர்ந்த நற்குணமுடையவனாகவும் கூறப்பட்ட இந்திரன் பல இழிவான காரியங்களையும் செய்தவனாகக் கூறப்படுகிறது. மமத்வாபிமானம் (தன்னைச் சேர்ந்தவன் என்ற அன்பு) உண்டாகுமானால் அதனால் தூண்டப்பட்டவர் கெட்டகாரியத்தையும் செய்ய முற்படுவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் சில கதைகள் உள்ளன. இந்திரன் அர்ச்சுனனிடம் உள்ள அன்பினால் பல அடாத செயல்களைச் செய்தான் என்று மகாபாரதம் காட்டிற்று. அதுபோலவே, விரோசனனுடைய பெண் மந்தரையை, பெண்ணைக் கொல்லுவது பாபம் என்பதையும் பொருட்படுத்தாமல் கொன்றான் என்று இராமாயணம் கூறுகிறது. நூறு அசுவமேத யாகம் செய்தவர் இந்திர பதவியை யடைவர். ஆதலின் அவ்விதம் யாகம் செய்த பல அரசர்களுக்கு, தன்பதவியிலுள்ள ஆசையினால் பலவித இடையூறுகளைச் செய்தான் என்றும் காணப்படுகிறது. சகரன் என்ற இக்ஷ்வாகு வம்சத்து அரசன் செய்த வேள்வியில் கபில உருக்கொண்டு குதிரையைக் கவர்ந்தான். அதன் காரணமாக சகரபுத்திரர்கள் கடலைத் தோண்டவும் கபிலமுனிவரின் கோபாக்கினியில் மாண்டதற்கும் காரணமானான் என்று ஆதிகாவ்யம் கூறும். திலீபன் என்ற அரசன் செய்த வேள்வியிலும் குதிரையைக் கவர்ந்தான் என்றது ரகுவம்சம். மாந்தாதா என்ற அரசன் இந்திர பதவிக்கு வந்தபொழுது, அவரைத் தடுக்க, லவணாசுரனைக் காட்டி அவனுடன் போரிட்டு மாந்தாதா இறக்கும்படி செய்தான். இப்படி பதவி ஆசையால் செய்த கெடுதல்கள் பல. காமத்தினாலும் பல கெட்ட காரியங்கள் செய்தவனாகவும் கூறப்படுகிறது.

கௌதமரின் பத்தினி அகல்யையிடம் தவருக நடந்து துன்ப மனுபவித்தான் என்பது மிகவும் பிரசித்தமானது. பாரிஷதன் என்ற அரசன் மனைவி வடிஷ்டமையிடம் ஆசை கொண்டு, குதிரையின் உடலில் புகுந்து இருந்து தன் எண்ணத்தை நிறைவேற்றியதுடன் வேந்தனின் வேள்வியையும் கெடுத்தான் என்று சிவமகாபுராணம் கூறும்.

சப்தவிடங்க ஸ்தலங்களுக்கும் இந்திரனுக்கும் ஒரு தொடர்பு உண்டு. தனக்கு உதவி செய்த முசுகுந்த சக்ரவர்த்திக்கு வேண்டியதைக் கொடுப்பதாக வரமளித்தான். அந்த அரசன் இந்திரன் பூசித்த தியாகராஜப்பெருமானைக் கேட்கவே கொடுக்க மனமில்லாத இந்திரன் அம்மூர்த்தியைப் போன்று மேலும் ஆறு உருவங்களை உண்டாக்கி ஒன்றை எடுத்துப்போகச் சொன்னன். இறைவனருளால் உண்மையான தியாகராஜப்பெருமானின் உருவத்தை முசுகுந்தன் எடுக்கவே, சொன்னசொல் தவறக் கூடாதென, அந்த மூர்த்தியையும், மற்ற ஆறு மூர்த்திகளையும் முசுகுந்தனுக்கே கொடுத்தான். அம்மூர்த்திகளில் இந்திரனும், அவனுக்கு முன்னல் திருமாலும் பூசித்த தியாகமூர்த்தியைத் திருவாரூரிலும், மற்ற ஆறு மூர்த்திகளையும். திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காருயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு என்ற ஸ்தலங்களிலும் ஸ்தாபித்த தாகத் திருவாரூர்ப் புராணம் கூறும்.

இவற்றுள் திருவாரூரில் விதிவிடங்கர் - அசபா நடனம். திருநள்ளாற்றில் நகவிடங்கர் - உன்மத்த நடனம். திருநாகைக் காரோணத்தில் (நாகப்பட்டினத்தில்) சுந்தரவிடங்கர் - பாராவார தரங்கநடனம். திருக்கோளிலியில் (திருக்குவளையில்) அவனி விடங்கர்-பிருங்கதடனம். திருக்காருயிலில் (திருக்காரைவாசலில்) ஆதி விடங்கர் - குக்குட நடனம். திருவாய்மூரில் நீலவிடங்கர் - கமல நடனம். திருமறைக்காட்டில் (வேதாரண்யத்தில்) புவனி விடங்கர் - ஹம்ஸபாத நடனம். இவை ஏழும் சப்த விடங்க ஸ்தலம் எனப்படும்.

பெரும்பாலான ஸ்தல புராணங்களில் அந்த அந்த க்ஷேத்திரத்தில் இந்திரன் பூசித்து விழாச் செய்ததாக இருப்பினும், இந்திர நீலபருப்பதமும், திருக்கண்ணர்கோயிலும் முக்கிய மானவை.

இவ்வாறு இந்திரனைப்பற்றிய வரலாறுகள் இல்லாத புராணமே இல்லை எனலாம். இந்திரன் கிழக்குத் திக்கிற்கு

அதிபதி ஆதலின் அவனுக்குத் தனியான பல மந்திரங்கள் வேதத்தில் உள்ளன. காயத்ரியும் உண்டு. அஷ்டோத்திர சதநாம ஸ்தோத்திரமும் உண்டு.

वज्रहस्ताय विद्महे सहस्राक्षाय धीमहि
तन्न इन्द्रः प्रचोदयात् என்பது காயத்ரீ.

மகாபாரதம் ஆதிபர்வம் 53-ஆவது அத்தியாயத்தில் மார்கழி மாதம் சுக்லபக்ஷத்தில் ஒரு மரத்தை நட்டு, மறுநாள் கொடியேற்றி இந்திர பூசை செய்யவேண்டும் என்றும், அதற்கு பலன் இதுவென இந்திரனே கூறுகிறான்.

ये पूजयिष्यन्ति नरा राजानश्च मखं मम ।
कारयिष्यन्ति च मुदा यथा चेदिपतिर्नृप
तेषां श्रीर्विभवश्चैव स्वराष्ट्राणां भविष्यति
तस्येप्सितो जनपदो मुदितश्च भविष्यति
निरीतिकानि सस्यानि भवन्ति बहुधा नृप
राक्षसाश्च पिशाचाश्च न लुम्पन्ते कदाचन ॥

(சேதிதேசத்து அரசனைப்போல இந்திர பூசை செய்பவரின் நாட்டில் செல்வம் செழிக்கும், மகிழ்ச்சி பொங்கும், ஈதிபாதைகளின்றி பயிர்கள் ஓங்கி வளரும், பேய், பிசாசு, அரக்கர் முதலியவர்களின் துன்பமுண்டாகாது). இவ்விதமான இந்திர பூசையைச் செய்து நாமும் நலம் பெறுவோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam
Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

I had the good fortune to visit this great temple today with my family and it made us so happy to see around the great things of this temple, the premises kept so tidy and clean.

(Sd.) T. L. Sankaran,
Machas Refineries Limited.
Madras.

31—1—70

# திருப்பரங்குன்றத் திருப்புகழ்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip.Ling.

**பரங்குன்றம் :**

திருவாலவாய் என்று சிறப்பிக்கப்பெறும் மதுரைமா நகரத்தின் மேற்பால் விளங்கும் குறிஞ்சித் தலம் திருப்பரங்குன்றம். இதன் தொன்மையும் நன்மையும் சங்கப்பனுவலுள் ஒன்ருகிய திருமுருகாற்றுப்படையான் இனிது விளங்குவதாகும். நக்கீரரது நன்மொழி இதனை இனிது விளக்கியுள்ளது. உயிரது பக்குவம் அறிந்து அருளும் செந்தமிழ் முருகன் இங்குத் தெய்வயானையம்மையைத் திருமணம் புரிந்தருளினன். சரவணப் பொய்கை இங்கு அடியவர் அரும்பிணி போக்கும் அருமைப்பாட்டுடன் திகழ்கின்றது. நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியதே இங்குத்தான் என்பது பழைய வழக்கு. திருஞானசம்பந்தர், சுந்தரர் செந்தமிழ்த் தேவாரப் பதிகங்கள் உண்டு.

**அருணகிரியார் பாடல் :**

அருணகிரிநாதர் இங்குப் போந்து வழிபட்டு வண்டமிழ்ச் சந்தப்பாக்கள் பல பாடினர். பதினன்கு சாத்திரங்கள் போன்று பதினன்கு பாடல்களே இப்போது கிடைத்துள்ளவை.

**விண்ணப்பம் :**

அடியவர் தம்முடைய பாவங்கள் தொலைந்திட வென்றே வேண்டிப் பெறுகின்றனர். பாவங்கள் தொலைவது துன்ப நீக்கம் என்பதில் அடங்கும். துன்பநீக்கமும் இன்பப்பேறுமே அன்றே இறைவன் அருளும் இணையற்ற பரிசில்கள். இங்குப் பாடும் முதற் பாட்டிலும் தம்முடைய விண்ணப்பத்தை இப்படித்தான் தொடங்குகின்ருர் அருணகிரியார்.

" பலதுன்பம் உழன்று கலங்கிய
சிறியன் புலையன் கொலையன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே "

சிறுமை, கீழ்மை முதலிய பலவும் உடைய நான் செய்த பாவங்கள் கழிந்திட நீ அருள் புரிந்திட வேண்டும் என்பது கருத்து.

**திருவடிப்பேறு :**

திருவடிப்பேறு வேண்டுவதும் பல பாடல்களிற் சொல்லப் பெறுவதே. ஆனால் சொல்லுகின்ற முறைகள் வேறுபடுகின்றன.

" இனிஉன்தன் மலர்ந்திலகும்பதம்
அடைவேனோ " (2)

போராடும் கருத்துடன் காதற்கடவுள் நிற்கின்றான்; நிலவோ தீயெனக் காய்கின்றது; நான் பெண்களின் கண்கள் வசமாகின்றேன். அம்மட்டோ? மலைச் சோலைகளிற் படிந்து வரும் தென்றல் சுனையிற் றோய்ந்து வலிவுடனே எழுகின்றது. இரவு, பகல், அந்தி ஆகிய எப்போதும் குயில் தெந்தென என்றிடப் பாடுகின்றது; இதனால் நொந்து கண்கள் துயிலின்றி நெஞ்சு பதைபதைக்க மங்கையர்பால் மயல் கொண்டு வருந்தும் வஞ்சன் நான், என்று தம்மைக் கூறிக்கொண்டு, இனி, எனக்கும் உன் மலர்ப்பாதங்கள் அணைந்திடும் பேறு கிட்டுமோ என்று கனிந்து பாடுகின்றார்;

சருவும்படி வந்தனன் இங்கித
மதனின்றிட அம்பிலியுஞ்சுடு
தழல்கொண்டிட மங்கையர் கண்களின்
வசமாகி
சயிலங் கொளு மன்றல் பொருந்திய
பொழிலின் பயில் தென்றலும் ஒன்றிய
தடவஞ்சுனை துன்றி யெழுந்திட திரமாகவே
இரவும்பகல் அந்தியும் நின்றிடு
குயில்வந்திசை தெந்தன என்றிட
இருகண்கள் துயின்றிட லின்றியும்
அயர்வாகி
இவனெஞ்சு பதன்பதன் என்றிட
மயல்கொண்டு வருந்திய வஞ்சகன்
இனியுன்றன் மலர்ந்திலகும்பதம் அடைவேனோ. (1)

என்பது அவ்விளக்கம்,

" வாச மிகுந்தகடம்ப மென் கிண்கிணி
மாலைகரங்கொளும் அன்பர்வந் தன்பொடு
வாழநிதம்புனையும் பதந்தந்துன தருள்தாராய் " (8)

என்பது மற்ருெரு பாடற்பகுதி. இதனுள் மணம் மிகுந்த கடம்ப மலரால் ஆகிய மெல்லிய 'கிண்கிணி மாலை'களைக் கையில் ஏந்திவரும் அன்பர்கள் அன்புடன் நாடோறும் சூட்டும் திருவடி என்றும், அவ்வடியிணைகளைத் தந்தருளவேண்டும் என்றும் விண்ணப்பிக்கும் அருமையினைக் கண்டு இன்புறலாம்.

## மயக்கம் நீங்கிட :

திருவடிப்பேறு கிட்டினுல், மனத்திலும் புத்தியிலும் உள்ள மயக்கம் நீங்கும் என்பது அருணகிரியார் கருத்து. மயக்கம் நீங்கினுல் இனிய தெளிவும் இன்பமும் தாமே வந்து எய்தும் என்பது அவரது முடிவு.

" புவிக்குளென் சிந்தைப் புத்தி மயக்கம்
துறக்கநின் தண்டைப் பத்ம மெனக்கென் றருள்வாயே" (11)

நின் திருவடித் தாமரைகளை நான் அடையப்பெற்ருல் என் சிந்தை மயக்கம் நீங்கிடும் என்ருர் அடிகள்.

" உன்சிலம்பும் கனக தண்டையும்
கிண்கினியும்
ஒண்கடம்பும் புனையும் அடிசேராய்" (13)

நின் திருவடியுள் சேர்த்தருள வேண்டும் என்று விண்ணப்பிக்கும் பகுதி இது.

## தண்டையின் ஒலி - சந்த பேதங்கள் :

பிறவிக் கடலினின்றும் கரையேற நின் திருவடி வேண்டும் என்ற பகுதியும் உண்டு.

" எரிப்படும் பஞ்சு போல
மிகக்கெடுந் தொண்டனேனும்
இனற்படும் தொந்தவாரி கரையேற
இசைத்திடும் சந்தபேதம்
ஒலித்திடும் தண்டைசூழும்
இணைப்பதப் புண்டரீகம் அருள்வாயே" (14)

சொல்லப்படும் பலவகையாகிய சந்தங்களை ஒலிசெய்யும் தண்டைகள் சூழ்ந்த திருவடி என்பதனைக் கூர்ந்து நோக்குதல் வேண்டும். இதன்கண், திருப்புகழிற் காணப்பெறும் பலவேறு சந்தங்கட் கான காரணம் குறிப்பாக இருக்கின்றதென்று

கூறலாம். அருணகிரியார் திருவுள்ளத்தில், முருகன் திருவடிகள் உள்ளன. அவற்றுள் தண்டையின் ஒலி அருணகிரியார் அகச் செவிகளில் விழுந்த வண்ணமே இருக்கின்றன. அந்தச் சந்தபேதங்கட்கு ஏற்ப, அவர் திருவாய் மலர்ந்திடும் தீந்தமிழ்ப் பாட்டுக்களும் பலப்பல வகைகளாகப் பிறிட்டு வெளிவருகின்றன. ஆம்; இந்தத் திருப்புகழ் வரிகளை, 'இசைத்திடும் சந்தபேதம் ஒலித்திடும் தண்டை' என்ற சொற்களை ஆழ்ந்து நோக்கினால், இவ்வுண்மை இனிது புலனாகும்.

காலன் வருங்காலத்து :

காலன் வரும்போது காட்சிதரல் வேண்டும் என்றும் விண்ணப்பிக்கும் பகுதி இங்குக் காணப்பெறுகின்றது. கனைத்துக் கொண்டு வருகின்ற எருமையின் கழுத்தின் மீது வருகின்றான் காலன். எறிகின்ற கயிறும், வருத்துகின்ற கதாயுதமும் கொண்டு அவனது தூதர்கள் பொர வருகின்றனர். அப்போது கலக்க முற்று நான் வருந்தும்போது ஒரு கணத்தில் என் அச்சம் தவிர்ந்திடுமாறு அருளவேண்டும் என்று ஓர் ஓவியமாகவே எழுதிக் காட்டியுள்ளார் அடிகள் ;

" கனைத்தெழும் பகடதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்
கதித்தடர்ந்தெறி கயிறடு கதைகொடு
பொருபோதே

கலக்கு றுஞ்செயல் ஒழிவற அறிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தில்என் பயமற மயில் முதுகினில் வருவாயே "

அயரா அன்பு வேண்டல் :

இறைவன் திருவடிகட்குப் பேரா அன்புதலைக்கூடுவதும் அடியார் வேண்டுவதே யாகும். 'கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விறல்' என்று சேக்கிழார் இந்த அன்பினை எடுத்துப் புகழ்வார். இவ்வாறு முருகனை அன்பு செலுத்தும் பேற்றினை வேண்டும் ஒரு கவிதையினையும் திருப்பரங் குன்றத்திற் பாடி மகிழ்கின்றார் அருணகிரியார்.

'எப்போதும் பாசத் தொடர்பினால் - கவலையாற் சோர்ந்து திரியாமல், கந்தன் என்று அடிக்கடிக் கூறி உளம் பொருந்தி உள்ளக்கண்ணாற் பார்த்து அன்பு கொள்ள மாட்டேனே' என்று மனங் கசிகின்றார் இவ்வருளாளர்.

'சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென் றுற் றுனை நாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனே' (9)

இவ்வாறு ஏங்கியவர்,

'தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே'

என்றெல்லாம் அவன் திருப்பெயர்களைக் கூறிக் கூறி மகிழ் கின்றார்.

## பணிசெய்யவேண்டல் :

திருவடிக்கு அன்புசெய்ய வேண்டும் என்று விண்ணப்பிப் பதுடன், தொண்டு புரிய வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்துள்ளார்.

'கழற்குத் தொண்டு கொண் டருள்வாயே' (10)

'உன் கரங்கள் தாமரைகள்; கொடைவளத்தில் நீ மேகம்; தண்ணிய தமிழுக்கு நீ புகலிடம்' என்று உலகத்தவரிடம் தவிப் புடன் சென்று இரந்து உள்ளம் புண்பட்டுத் தளர்ச்சி யுறும் இந்தப் பம்பரத்தை, பண்டத்தை துன்பத்துக்கு ஈடாகிய மண் உடலை, ஐம்பொறிகளின் வாழ்வை' என்றெல்லாம் விளக்கிச் செல்கின்றார் இத்திருபாட்டின் முதற்பகுதியில்: (10) இப்பகுதி உலகமாந்தர் நிலையைத் தம்மேலிட்டுக் கொண்டு பேசுவ தாகவே இருக்கின்றது.

திருப்பரங்குன்றத்தைப்பற்றிய வளங்களை விளக்குவனவாக ஒவ்வொரு பாட்டிலும் சிற்சில பகுதிகள் அமைந்துள்ளன.

## பரங்குன்ற வளம் : இயற்கை இறந்தமை :

அபூதக் கற்பனை வகையில் திருப்பரங்குன்றத்தை வரு ணித்து மகிழ்கின்றார் அடிகள். திங்களும் ஞாயிறும் வந்து தடவிச் செல்லும் அளவிற்கு உயர்ந்துள்ள சோலைகள் திருப் பரங்குன்றத்தில் திகழ்கின்றன என்கின்றார்.

" மதியும் கதிரும் தடவும்படி
உயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று பரங்கிரி " (1)

திங்களும் ஞாயிறும் மேகமும் தடைப்பட்டு நின்று மயங்குமளவிற்கு உயர்ந்த பரங்கிரி என்று இதனையே சிறிது மாற்றியமைத்தலும் உண்டு;

" மதியும் கதிரும் புயலும் தின
மறுகும்படி அண்டம் இலங்கிட
வளர்கின்ற பரங்கிரி " (2)

இங்கு மலையின் உச்சியை அதே நெறியில், வருணிக்கக் காண்கின்றோம்.

வண்டோசை :

திருப்பரங்குன்றத்துச் சோலை வண்டுகள், 'தெனத் தெனந்தன' என்று ஒலித்தபடித்தேனைத் தெவிட்டுமளவு ஆசையுடன் உண்ணும் உயர்ந்தோங்கிய பொழில்கள் என்கின்றார் அடுத்து:

" தெனத் தெனந்தன எனவரியளிநறை
தெவிட்ட அன்போடு பருகுயர்பொழில்திகழ்
திருப்பரங்கிரி " (4)

திணைமயக்கம் :

திணைமயக்கம் படவும் அருணகிரியார் பாடுவர். ஆனால் இங்கு வேறொருவகை. திருப்பரங்குன்றத்துச் சோலைகளில் சங்குகள் நீர்நிலைகளில் கிடக்கின்றன. அவை முத்துக்களை ஈனுகின்றன. திருப்பரங்குன்றத்துநகர் இவ்வாறு வளமருவித் திகழ்கின்றது என்பர். இங்கு நெய்தல்சார்ந்த முத்துக்கள், குறிஞ்சிசான்ற மலைநகரில் மருவிக் கிடப்பன என்ற நயம் உணர்தற்குரியது.

" செழித்த தண்டலை தொறுமிலகிய குட
வளைக்குலந்தரு தரளமு மிகுமுயர்
திருப்பரங்கிரி வளநகர் " (6)

இங்கு, முத்து என்பது தூய்மையையும் தண்மையையும் குறிக்கு மாதலின், தண்ணிய தூய சான்றோர் வாழும் திருநகர் இது என்றும் குறித்ததாகக் கொள்ளுமாறு அமைந்திருத்தல் கண்டு மகிழத்தக்கதாகும்.

குளிர்ச்சியும் மணமும் உடையபொழில் சூழ்ந்தது; வித்தியா தரரும் வந்து வழிபடும் சிறப்பினது; தேவர் பணிந்தெழும் திறத்தது இப்பதி என்றுரைக்கின்றார் பிறிதோரிடத்து.

" சீதன முந்துமணந் தயங்கும் பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ்சுபதி
தேவர் பணிந்தெழு தென்பரங்குன்று " (8)

வித்தியாதரரும் தேவருமாகிய மேலோர் வந்து வழிபடுவராயின் அங்கு முத்துப்போலுஞ் சான்றோர் கூடி வாழும் திறம் கூறலும் வேண்டுமோ ?

இவ்வாறு குறிஞ்சிப் பெருந்தலமாகிய திருப்பரங்குன்றம் அருணகிரியார் திருவாக்கில் பெருஞ்சிறப்புப்பெற்றுப் பேரருள் ஓவியமாகப் பிறங்குகின்றது.

**கவிதை மாலை :**

இலக்கணங்கள் பொருந்துமாறு இயற்றமிழினும் இசைத் தமிழினும் விரித்துரைக்கப்பெறுகின்ற அழகிய பல சுவை மிக்க கவிதைகளாக இயற்றப்பட்ட செந்தமிழை வகைவகை யாகத்தன் திருப்புயங்களின்மீது அணிகின்றவன் முருகன் என்கின்றார் அருணகிரியார். தமிழ்க் கவிதைகளால் தன்னை அழகுபடுத்திக் கொள்ளுவதிற் பெருவிருப்புடையவனாதலின். அத்தமிழ்க்கடவுளுக்கு 'அலங்காரம்' என்னும் ஒப்பற்ற போற்றிப் பாமாலையைப் புனைந்து சூட்டிய பெரும்புலவராகிய அருணகிரியார் அப்பெருமானுடைய இயல்பினை யறிந்தே இவ்வாறு இனிக்க இனிக்கப் பாடுகின்றார் என்று கூறலாம்.

" இலக்கணங்களும் இயலிசைகளுமிக
விரிக்கும் அம்பல மதுரித கவிதனை
இயற்று செந்தமிழ் விதமொடு புயமிசை
புனைவோனே " (3)

என்ற இப்பகுதியில், கவிதையை 'மதுரித கவி' என்று சுவையொழுகச் சொல்லும் அருமைப்பாடு ஊன்றி உணர்தற்குரிய சுவை உடையதாய் உள்ளது.

## முருகனே சம்பந்தர் எனல் :

திருஞானசம்பந்தராக வந்தவர் திருமுருகனே என்ற கொள்கை உடையவர் அருணகிரியார். முருகன் முத்தமிழ் விருப்பம் உடைய கடவுள் ஆதலின், வாயார இசை கலந்து வண்டமிழை வாழ்வித்தவன் அச்செவ்வேளே என்பது இச் செந்தமிழ்க் கவிஞரின் கருத்து :

" மிகுத்திடும் வன் சமணரைப்
பெருந் திண்கழு
மிசைக்கிடும் செந்தமிழ்
அங்கவாயா " (12)

என்றவிடத்து, வேத அங்கங்களைப் பயின்ற திருவாயால், செந்தமிழைப்பாடிய செம்மாப்பினைச் சிறப்பித்துப் பேசுகின்றார்.

" கொன்றைச் சடையற்கு
ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப்
பகர்வோனே " (19)

என்று திருச்செந்தூர்த் திருப்புகழிலும் பாடுவது இதனையே குறிக்கும் என்பர் தணிகைமணி அவர்கள் ; " சிவபிராற்கு மூலப்பொருளைத் தமிழில் முருகவேள் பகர்ந்தனர் என்கின்றனர் அது, சம்பந்தராய்த் தேவாரம் பாடினதையும் குறிக்கலாம்". (தணிகைமணி - முருகவேள் பன்னிரு திருமுறை - தொகுதி 1, 1951. பக்கம் 61 காண்க.)

" மழுக்கைக் கொண்ட சங்கரர்க்குச்
சென்றுவண்
டமிழ்சொற் சந்தமொன் றருள்வோனே "

என்று பிறிதோரிடத்தும் இதே குறிப்பு வருதலைக் காணலாம்.

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,
**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

(மலர் 29, இதழ் 3, பக்கம் 184ன் தொடர்ச்சி)

## (19) திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

"திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்"

—திருத்தொண்டத்தொகை.

" மண்டும் புளற்சடை யான்றமர் தூசெற்றி வாட்டும் வகை
விண்டு மழைமுகில் விடாதொழிமின்யான் விவனென்று
மிண்டும் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி யேகாலியர்தங்கள் தொல்குலமே "

—திருத்தொண்டர் திருவந்தாதி.

தொண்டை நாட்டுத் தலைநகரம் காஞ்சிபுரம். இந்நகரம் பல்வகையாலும் சிறப்புப்பெற்றது. எல்லா வுலகங்களுக்கும் தாயாக விளங்கும் அம்பிகை உயிர்கள் உய்யும் பொருட்டுப் பல வறங்களைச் செய்து, சிவபிரானை வழிபட்ட பெருமைக்குரியது இந்நகரம். இந்நகரில் ஏகாலியர் குலத்தில் திருக்குறிப்புத் தொண்டர் அவதரித்தார். திரிகரணங்களாலும் சிவபெருமானுடைய திருவடிகளில் இவர் அன்பு செலுத்திவந்தார். சிவனடியார்களுக்குத் தொண்டு செய்யும் சிறப்பினை யுடையவராய் இலங்கினார். அடியவர் உள்ளக் குறிப்பை யறிந்து போற்றும் தகைமையினால் இவர் திருக்குறிப்புத் தொண்டர் என்னும் சிறப்புப்பெயரைப்பெற்றார். தம்குலமரபுக்கேற்றபடி சிவனடியார்களுக்கு அவர்கள் உடுத்தும் ஆடைகளைப் பெருமகிழ்ச்சியோடு வெளுத்துக்கொடுக்கும் திருத்தொண்டைச் செய்துவந்தார். ஆடையிலுள்ள அழுக்கு, தோய்க்கும் காலத்து நீங்குதல்போல திருக்குறிப்புத் தொண்டருடைய மும்மலப் பிறவியாகிய அழுக்கும் நீங்கி வந்தது,

## இறைவன் திருவிளையாட்டு :

சிவபெருமான் திருக்குறிப்புத் தொண்டருடைய உண்மை யன்பை உலகறியச் செய்யவேண்டி குளிர்மிகுந்த காலத்தில் ஒருநாள் அழுக்கடைந்த பழந்துணியை அரையில்கட்டிகொண்டு சிவனடியார் வேடம் பூண்டு அந்நாயனாரை அடைந்தார். திருக்குறிப்புத் தொண்டர் அவ்வடியவரைக் கண்டு வணங்கி இன்மொழி பலபேசி அவருடுத்த கந்தையை அழுக்குப் போக்கித் தருகிறேன் என்று வேண்டினர். சிவபிரான், "அன்பரே இவ்வாடை அழுக்கேறியதாக இருந்தாலும் குளிரைப் போக்கிக் கொள்ளப் பயன்படுகிறது. நீர் சூரியன் மறையும் முன்னே தோய்த்து உலர்த்திக் கொடுப்பதாக உறுதி சொன்னால் தருகிறேன் என்று சொன்னர். தொண்டரும் அதற்கிசைந்தார்.

## மழை இடையூறு செய்தது :

சிவனடியார் குறித்த காலத்தில் தோய்த்து உலர்த்திக் கொடுப்பதாக உறுதிமொழி கூறிய திருக்குறிப்புத்தொண்டர் அவ்வாடையை வெள்ளாவியில் வைத்து அழுக்கைப் போக்கத் தடாகத்துக்குச் சென்ருர். இறைவன் திருவருளால் மேகங்கள் திரண்டு மழை பொழிந்தன. தொண்டர் மனமுடைந்து என்ன செய்வதென்று திகைத்து நின்ருர்; மழை விடாமல் இரவு வரும் வரை பெய்து கொண்டிருந்தது. அடியவர் வேடத்தில் வந்த சிவபெருமான் திருக்குறிப்புத்தொண்டரை யடைந்தார், தன் ஆடையைத் தருமாறு கேட்டார். குளிரில் நடுங்குவதுபோல பாவனை செய்து நின்ருர். திருக்குறிப்புத்தொண்டர் மிகவும் மனம் வருந்தி "தன்குற்றேவல் பிழைத்ததே அடியவர் திருமேனி குளிரில் நடுங்கும்படியாயிற்றே", என்று பலவாறு கூறி மயங்கி விழுந்தார், தெளிந்து மீண்டும் எழுந்து இவ்வடிய வருக்குச் செய்த பிழைக்குத் தண்டனை பெறுவதே தக்கது என்று முடிவுசெய்து துணிகளைத் துவைக்கும் கற்பாறையின்மேல் தமது தலையை முட்டி மோதிக்கொண்டார். அப்போது ஏகாம்பர நாதரின் வளைத்தழும்பு பட்ட மலர்ச் செங்கை தொண்டரின் தலையைப் பிடித்து நிறுத்தியது. பெய்து கொண்டிருந்த புனல் மழை பூமழையாக மாறியது. இறைவன் உமையம்மையோடு வெள்விடையில் காட்சி வழங்கினர். திருக்குறிப்புத்தொண்டர் இறைவன் திருவருளை எண்ணி வழுத்தி வணங்கி நின்ருர். சிவபெருமான் தொண்டரை நோக்கி, "உன் அன்பின் பெருமையை உலகறியச் செய்தோம். இனி நீ நம்முலகம் வந்து நம்மைப் பிரியாது வாழ்வாயாக," என்று அருள்புரிந்து மறைந் தார். அடியவரும் இறைவன் திருவடி நிழலையெய்தி இன்புற்ருர்.

## (29) சண்டேசுவர நயனூர்

“ மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினல் எறிந்த
அம்மையான் அடிச்சண்டி பெருமா னுக்கடியேன் “

—திருத்தொண்டத்தொகை.

“ குலமேறிய சேய்ஞலூரிற் குருசில் குரைகடல் சூழ்
தலமேறிய விறற் சண்டிகண் டீர்தந்தை தாளிரண்டும்
வலமேறிய மழுவா லெறிந்தீசன் மணிமுடிமேல்
நலமேறிய பால்சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே. ”

—திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழவள நாட்டில் திருப்பனந்தாளுக் கண்மையில் மண்ணி யாற்றின் தென்கரையில் அமைந்து விளங்குவது சேய்ஞலூர் என்னும் திருத்தலம். வேள்விகள் செய்து இறைவனை வழிபடும் மறையவர்கள் பலர் இவ்வூரில் வாழ்ந்தனர். வயல்வளம் சான்ற இத்தலம் சோழமன்னர்கள் முடிசூட்டிக்கொள்ளும் ஐந்து நகரங் களில் ஒன்ருக விளங்கும் பெருமையை உடையது. பண்ணுக்கு இசையும், பாலுக்குச் சுவையும், கண்ணுக்கு ஒளியும், கருத்துக்கு ஐந்தெழுத்தும், விண்ணுக்கு மழையும், வேதத்துக்குச் சைவமும் போல மண்ணுக்குச் சிறப்பைத் தருவது இத்தலம் என்று இப் பதியின் சிறப்பைச் சேக்கிழார் சிறப்பித்துக் கூறுகிருர்.

### திருவவதாரம் :

பெருமைபொருந்திய இத் திருப்பதியில் அந்தணர் மரபில் காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்னும் அந்தணன் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவன் மனைவி பவித்திரை என்பவள், இவர்களுடை திருமகஞராக வேதநெறி விளங்கவும், உலகவர் உய்யவும், சைவம் சிறப்புறவும் விசாரசருமர் என்பவர் அவதரித் தார். ஐந்தாண்டுகள் நிரம்பியதும் அரும்பில் மறைந்துள்ள மணம் காலத்தில் வெளிப்படுவதுபோல முற் பிறப்புக்களில் அவர் பெற்றிருந்த வேதாகமக் கலைமணம் விளங்கத் தொடங் கிற்று. ஏழாண்டுகள் நிரம்பிய விசாரசருமருக்குப் பெற்ருேர் உபநயனம் செய்வித்தனர். அனைவரும் வியக்க விசாரசருமர் அளவற்ற கலைஞானம் உடையவராய் விளங்கினர். இறைவன் திருவடிகளில் அவர் கொண்டிருந்த பற்று ஊற்றெடுத்துப் பெருகத் தொடங்கிற்று. இறைபணி செய்வதில் அவர்மனம் பெரிதும் ஈடுபட்டது.

## ஆனிரை காத்தல் :

ஒருநாள் விசாரசருமர், பசுமேய்க்கும் இடையன் பசுக்களை யடித்து வருத்துவதைக் கண்ணுற்ருர். பசு தெய்வத்தன்மை பொருந்தியது, இறைவனுக்கு அபிடேகஞ் செய்யும் பஞ்ச கௌவ்யத்தைத் தரும் சிறப்பை உடையது. பசுக்களைக் காப்பதே சிறந்த கடமை. இதுவே இறைவர்க்குச்செய்யும் தொண்டுமாகும் என்று கூறி, தானே பசு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டார். அன்போடு பசுக்களை மேய்த்துப் பாதுகாத்தார். பசும்புல் அருத்தி அன்புகாட்டி இவர்பேணி வளர்க்கத் தொடங்கியதும் பசுக்கள் பலமடங்கு பாலைச்சொரிந்தன. அதனைக்கண்ட யாவரும் மிக்க மகிழ்ச்சிகொண்டனர்.

## மணலில் இலிங்க வழிபாடு :

தன்னை அன்புகாட்டி வளர்க்கும் விசாரசருமரிடம் பசுக்களும் பரிவுகாட்டின. அவர் பக்கத்திற்சென்று உருகி தாய்போலக் கனைத்துக் கறவாமலே பாலைப் பொழிந்தன. அதைக்கண்ட விசாரசருமர் இப்பால் இறைவனுக்குத் திருமஞ்சனமாகும் குறிப்பை யறிந்து மண்ணியாற்றின் கரையில் ஆத்திமரத்தின் கீழே மணலால் இலிங்கமமைத்து சிவபூசை செய்ய முற்பட்டார். பசுக்களின் பாலைக்குடங்களில் நிறைத்து மணற்கோயிலுக்கருகில் அமைத்துக்கொண்டு இறைவனுக்கு அபிடேகம் செய்து அர்ச்சித்து வணங்கினுர். இவ்வாறு இறைவனுக்குக் குடம் குடமாகப் பாலைக் கொடுத்தும் பசுக்கள் வீட்டுக்குச்சென்றும் முன் போலவே குறைவின்றிப் பாலைச் சொரிந்தன.

விசாரசருமர் செய்யும் இச்செயலைக்கண்ட ஒருவன் பாலை வீணுக்குவதாகப் பசுக்களின் சொந்தக்காரரிடம் பழி சொன்னுன். பசுவின் சொந்தக்காரர்கள் விசாரசருமரின் தந்தையாகிய எச்சதத்தனிடம் குறைகூறினர். எச்சதத்தன் இதுவரை என்மகன் செய்த குற்றங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். இனி அப்படி நடைபெருமல் நான் கவனித்துக் கொள்கிறேன் என்று உறுதி சொன்னுன். மறுநாள் விசாரசருமர் வழக்கம்போலப் பசுக்களை மேய்ச்சலுக்கு ஓட்டிச் சென்ருர். எச்சதத்தன் தன் மைந்தனுக்குத் தெரியாது ஓரிடத்தில் இருந்து விசாரசருமரின் செயல்களை ஆராய்ந்து கொண்டிருந்தான். விசாரசருமர் மண்ணியாற்றில் நீராடி மணலால் சிவலிங்கம் பிடித்து சிவபூசை செய்ய

முற்பட்டார். பசுக்கள் தாமே சொரிந்த பாலைக் குடங்களில் நிரப்பிவைத்துக் கொண்டு, சிவாகம விதிப்படி அன்போடு அபிடேகம் செய்தார். தன் மகனுரின் செயல்கண்ட எச்சத் தத்தன் கோபங்கொண்டு அவரிருக்கும் இடத்திற்கு ஓடிவந்து, கையிலிருந்த கோலால் முதுகின்மேல் அடுத்துக் கடிந்து கொண்டான். விசாரசருமர் சிவபூஜையில் ஒன்றியிருந்த காரணத்தால் தந்தையின் அடியையோ சுடுசொற்களையோ உணரவில்லை. எச்சதத்தன் மேலும் அவரை யடித்தும் அவர் முன்போலவே உணராமலிருந்ததை யறிந்து அருகிலுள்ள பாற்குடங்களைக் காலால் இடறிச் சிந்தினுன். அதனைக்கண்ட விசாரசருமர் பெருங்கோபங்கொண்டு, திரும்பிப் பார்த்தார். தந்தையாயிற்றே என்று பொருட்படுத்தாமல் பாதகம் செய்த அவரைத் தண்டிக்க எண்ணினுர். அருகிலிருந்த கோலொன்றை எடுத்தார். அக்கோல் மழுப்படையாக மாறியது. அதனைக் கொண்டு தந்தையின் கால்களைத் துணித்து விழ்த்தினுர். எச்சத் தத்தன் மயங்கி மண்மேல் விழுந்து இறந்தான். மீண்டும் விசாரசருமர் சிவபூஜையில் ஈடுபட்டார்.

அருட்காட்சி :

விசாரசருமரின் உறுதியையும், அன்பையும் கண்டுவந்த இறைவன் விடையின்மேல் உமையம்மையோடு அருட்காட்சி வழங்கியருளினுர். விசாரசருமர் களிப்பு கரைபுரள இறைவன் திருவடிகளில் விழ்ந்து வணங்கினுர். பெருமான் அவரை அன்போடு எடுத்து நம்பொருட்டுத் தந்தையின் கால்களை வெட்டி இறக்கச் செய்தாய். இனி, நாமே உனக்கு அடுத்த தந்தையாயினேம் என அருளிச்செய்து அணைத்துத்தழுவி உச்சி மோர்ந்து மகிழ்ந்தார். பெருமானின் திருக்கரம் பட்டவுடன் விசாரசருமரின் மாயையால் ஆகிய உடல் சிவமயமாயிற்று. பெருமான், அவரைத் திருத்தொண்டர்கட்கெல்லாம் தலைவராக்கி 'சண்டீசன்' என்ற பதவியை வழங்கி 'நாம் உண்ட பரிகலமும், உடுத்தும் உடைகளும், சூடும் மாலைகளும் உமக்கே யாகுக' என்று கூறித் தம் திருமுடியிலிருந்த கொன்றை மாலையை அவருக்குச் சூட்டினுர். விசாரசருமரால் வெட்டப்பட்டு உயிர் துறந்த எச்சதத்தன் பெருமான் திருவருளால் பிழைநீங்கப் பெற்றுச் சிவபதம் அடைந்தான்.

( தொடரும் )

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னாகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

( மலர் 29. இதழ் 3, பக்கம் 173 இன் தொடர்ச்சி )

இதுவரையில் கூறிவந்தபடி முறைப்படி ஸ்னானம் அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்துகொண்டு ஆசாரியன் கையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு ஆலயத்தில் நுழைந்து சிவன் சந்நிதிமுன் புஷ்பத்தைப் போட்டு நமஸ்கரிக்க வேண்டும்.
— சுப்ரபேதாகமம்.

சூரியன் உதயமாவதற்கு மூன்று நாழிகை முன்பு போக சக்தியாலயம் சென்று அஷ்டபுஷ்பம் சாத்தி தந்தசோதனம் பாவனாஸ்னானம் தூபம் தீபம் நைவேத்யம் பாத்யம் ஆசமனம் அர்க்கியம் கொடுத்து உபசரித்து தேவனைப் பாதுகையில் யோஜித்து சிவிகையில் ஆரோகணம் செய்வித்து பிரதக்ஷிணமாக கர்ப்பக்கிரஹத்திற்குக் கொண்டு சென்று மூலலிங்கத்துடன் சேர்ந்ததாகப் பாவித்தல் வேண்டும். பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து தேவிபூஜை வரையில் உஷக்கால பூஜை முடியவும் சூரியனுடைய உதயமும் சரியாக இருக்கவேண்டும்.
— காரணாகமம்.

கண்டிதீபம் எனப்படும் சக்திதீபத்துடன் ஆசாரியனை அழைத்துவந்து ஸர்வவாத்யங்களுடன் க்ஷேத்ரபாலர் கோவிலுக்குச் சென்று பூஜித்து அவரிடமிருந்து முத்ராதண்டம் பெற்று சயனாலயம் செல்லவேண்டும்.

रुद्राक्षमालिकायुक्तमाहूय देशिकोत्तमम् ।
दत्वाच वर्धनीदीपं सर्ववाद्यसमन्वितम् ॥
क्षेत्रपालालयं गत्वा मुद्रादण्डार्थमीशितुः ।
संपूज्य मुद्रां गृह्याऽथ प्रविशेच्छयनालयम् ॥
क्षेत्रपालस्य पूजान्तं दीपयुक्तं प्रपूजयेत् ।
शक्तिदीप विहीने सा पूजा निष्फलदा भवेत् ॥

ருத்ராக்ஷமாலையுடன் கூடிய மேன்மையுள்ள ஆசாரியனை சங்கவட்டாய் தீபம் என்ற சத்தி தீபத்துடன் அழைத்து வரவேண்டும். அவ்வாறு ஆலயத்துள் நுழைந்த ஆசாரியன் க்ஷேத்ரபாலாலயத்திற்குச் சென்று க்ஷேத்ரபால பூஜைசெய்து முத்ராதண்டம் பெற்று போகசத்தியாலயம் போகவேண்டும். க்ஷேத்ரபாலபூஜை வரையில் சத்திதீபமிருக்கவேண்டும். சக்திதீபமில்லாத அந்த பூஜை பலனற்றது.

— வசனரத்னவளி.

आचार्यानयने चैव वीधिनिर्गमने तथा ।
देशिकस्य विधेयंस्या दन्येषां च नकारयेत् ॥

ஆசாரியனை அழைத்துவரும்போதும் ஆசாரியன் வீதிகளில் செல்லும்போதும் சத்திதீபத்துடன் செல்லவேண்டும், மற்றவர்களுக்குக் கூடாது.

உஷ: காலபூஜை ஆரம்பம் செய்யும்முன்பு பஞ்சமகா சப்தங்களை உத்கோஷிக்கச் செய்யவேண்டும். அதாவது பார்த்திவமான மரம் முதலியவைகளால் செய்யப்பட்ட நாதசுரம், தவுல் முதலியவைகளையும் அப்ஜமான சங்கம் முதலியவைகளையும் ஆக்நேயஜமான (உலோகம்) சேமங்கலம் முதலியவைகளையும் வாயவ்யமான குழல் முதலியவைகளையும் ஆகாயஜமான வாய்ப்பாட்டு முதலியவைகளையும் கோஷிக்கச்செய்ய வேண்டும். — வாதுளாகமம்.

भास्करयोदयात्पूर्वं त्रिपादेन त्रिनाडिका ।
उषःकालमिति प्रोक्तं प्रातः कालमिहोच्यते ॥
भास्करोदयमारभ्य सर्धं सप्तकनाडिका ।
प्रातः कालमिति प्रोक्तं संगमः पञ्चनाडिका ॥
संगमान्तं समारभ्य कालं माध्यान्हमुच्यते ।
सायंकाले सायरक्षा रजनी कालमुच्यते ॥
रवेरस्तं समारभ्य सार्धसप्तक नाडिका ।
रजनीकालमित्यक्तं अर्धयाम मघोच्यते ॥
रजन्यन्तं समारभ्य त्रिपादेन त्रिनाडिका ।
अर्धयाममिति प्रोक्त मर्धरात्रमतः परम् ॥

சூரியன் உதயத்திற்கு மூன்றேமுக்கால் நாழிகை முன் உஷ: காலம் என்று பெயர். சூரிய உதயம் முதல் ஏழரை நாழிகை காலம் காலசந்தி என்று பெயர். அதற்குமேல் ஐந்து நாழிகை சங்கம காலமாகும். அதற்குப்பிறகு ஏழரை நாழிகை உச்சிக்காலம். சூரியன் அஸ்தமனத்திற்கும் மூன்றேமுக்கால் நாழிகை ப்ரதோஷ காலம். சூரிய அஸ்தமனம் முதல் ஏழரை நாழிகை சாயரக்ஷாகாலம். அதற்குமேல் மூன்றேமுக்கால் நாழிகை அர்த்தயாமம். இவை ஷட்காலபூஜாமுறையாகும்.

— தீப்தம்.

உஷ: காலத்தில், பைரவர், பள்ளியறை, சொக்கர், தேவி, மூலலிங்கம், தேவி இவர்கள் பூஜிக்கப்படவேண்டும்.

(உஷக்காலத்தில்) ஆன்மசுத்தி, மந்திரசுத்தி அந்தர் யாகம் துவார பூஜை ஸ்திராஸன அருச்சனை ஹோமம் பலி இவைகள் கூடாது. பரிவாரங்களுக்கும் பூஜை கிடையாது.

கணபதி விருஷபன், ஸ்கந்தன், தக்ஷிணாமூர்த்தி, லக்ஷ்மி, சூரியன் முதலானவர்களுக்கும் பூஜை கிடையாது.

— காரணாகமம்.

பஞ்சகவ்யம், பஞ்சாமிருதம் இவைகளை முறைப்படி தயா ரித்துக்கொண்டு கருப்பக்கிருஹம் சென்று நிர்மால்ய விஸர் ஜனம் செய்து லிங்கசுத்தி செய்து பின் ஆஸனமூர்த்தி மூலத் தால் அர்ச்சித்து அஷ்டபுஷ்பம் சாத்தி அபிஷேகம் செய்து வஸ்திரபுஷ்பம் முதலியன சாத்தி நைவேத்யம் தூபதீபம் கற்பூர ஆராத்ரிகம், பஸ்ம, கண்ணாடி, குடை, வியஜனம், விசிறி முதலிய உபசாரங்களையுஞ் செய்து பாத்தியம் அர்க்கியம் ஆசம னீயம் கொடுத்துப் பூஜைமுடித்துக்கொண்டு தேவியாலயத் திற்குச் செல்லவேண்டும்.

முக்கியமாக உஷ: காலத்தில், தயிரன்னம் ஏலக்காய், நெய்விட்ட எலுமிச்சம்பழரஸம், பால், ரஸவர்க்கம் பழங்கள் நிவேதனம் செய்யவேண்டும்.

— காரணாகமம்.

அஷ்டபுஷ்பம் என்பது ஆஸனம் மூர்த்தி மூலத்துடன் ஹ்ருதயம் சிரஸ், சிகை கவசம் அஸ்திரம் என்ற இந்த எட்டு

மந்திரங்கள் ஆகும். இதற்கு மந்திராஷ்ட புஷ்பம் எனப் பெயர். (புஷ்பாஷ்டபுஷ்பம் பாவாஷ்ட புஷ்பம் பின்வரும்)

**காலசந்திபூஜை :**

காலசந்தி பூஜை ஆரம்பம் செய்யும்முன் தீர்த்தசங்கிர ஹணம் செய்யவேண்டும். ( தீர்த்தம் - ஜலம். கிரஹணம் - எடுத்தல். )

முதல்தினம் அர்த்தயாமபூஜை முடிவில் சயனலயம் சென்றபோது இறைவனின் திருமுடியிலிருக்கும் கங்காதேவி யானவள் சயனலயத்திலிருக்கும் மனோன்மணியைப் பார்த்து உடனே அங்கிருந்து நதியில் சேர்ந்துவிடுகிருள். திரும்ப அந்த கங்கையைக் காலையில் சகலவிதமான வாத்யகோஷங்க ளுடனும் சகல உபசாரத்துடனும் அழைத்துவருவது தீர்த்த சங்கிரஹணம் என்று பெயர்.

இவ்வாறு கொண்டுவந்த தீர்த்தத்தைப் பலிபீடம் முதலான ஏதாவதொரு இடத்தில் பரிஹரிக்கவேண்டும்.

**காலசந்தி முறை :**

प्रातः काले यजेत्सूर्यं गणेशं पूजयेत्ततः ।
महेश्वरादिवेशणा पूजनीयं यथाक्रमम् ॥
परिवारादि देवाना मभिषेकोप्यलंकृतिः ।
मूल लिङ्गे विशेषेण पूजाकर्म समाचरेत् ॥
पूर्वं गणेश नैवेद्यं मूलबेरस्य तत्परम् ।
महेशानां निवेद्याऽथ सर्वेषां च निवेदयेत् ॥
पश्चान्निवेद्य गौर्याश्च उपचारान्यथाक्रमम् ।
धूपदीपादिकं दत्वा बलिं कृत्वा ततः परम् ॥
हुताशनं समभ्यर्च्य नित्योत्सव मतः परम् ।
चण्डेशयजनं पश्चात् प्रातःकाले विधीयते ॥

— காரணாகமம்

காலசந்தி பூஜையில் முதலில் சூரியபூஜை செய்துகொண்டு பிறகு விக்னேச்வரனையும் பூஜித்து மகேச்வர பேரங்களுக்கும், பரிவாரதேவதைகளுக்கும் அபிஷேகம் அலங்காரம் செய்து கொள்ளவேண்டும். பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து நிவேதனம் செய்தபிறகு பரிவாரங்களுக்கு நிவேதனம் செய்யவேண்டும். அதன்பிறகு தேவிக்கும் அபிஷேகம் நைவேத்யம் முதலியன செய்து பலிபோட்டு நித்யாக்னி காரியம் நித்யோத்ஸவம் செய்யவேண்டும். அதன்பிறகு சண்டேசுவரபூஜை செய்யவேண்டும்.

பூஜையானது சாங்கம், உபாங்கம், ப்ரத்யங்கம் என்ற மூன்றை உடையது. அங்கத்தில் 8ம் உபாங்கத்தில் 10ம் ப்ரத்யங்கத்தில் 6மாக இருபத்திநான்கு செய்கைகளை உடையது. அதாவது அபிஷேகம், பாத்யம், ஆசமனம், வஸ்திரம், ஆபரணம், சந்தனலங்காரம், அர்க்கியம், மந்தரபுஷ்பம் இந்த எட்டும் அங்கம் எனப்படும்.

தூபதீபம், பஸ்மரக்ஷை, குடை, கண்ணாடி, சாமரம், சுருட்டி, வ்யஜனம், நிருத்தம், கேயம், வாத்யம் என்ற பத்தும் உபாங்கம் எனப்படும்.

நைவேத்யம், பலி, ஹோமம், உத்ஸவம், சுளுகோதகம், ஸ்வஸ்திவாசனம் என்ற ஆறும் ப்ரத்யங்கம் எனப்படும்.

— காரணாகமம்.

அபிஷேக கலசத்தை இடது கரத்தில் வைத்துக்கொண்டு, வலது கையை சங்க முத்ரையால் மூடிக்கொண்டு லிங்கத்தின் சிரசிலிருந்து இரண்டங்குலம் உயரத்தினின்றும் பசுவின் நுனிக்கொம்பின் அளவு சிறுக விழும்படி ஒவ்வொரு திரவியத்தையும் அபிஷேகம் செய்து ஒவ்வொரு திரவியத்திற்குப் பின்னும் திருமஞ்சன தீர்த்தத்தாலும் அபிஷேகம் செய்ய வேண்டும். அபிஷேகத் திரவியத்தின் ஒவ்வொன்றிற்கும் முடிவில் தூபதீபம் நிவேதனம் செய்யவும்.

आवाहनावसाने तु मधुपर्कं निवेदयेत् ।
गन्धतोयावसानेतु मन्त्रार्घ्यं तु निवेदयेत् ॥
मार्जनान्ते तु शुद्धान्न मलंकारे महाहविः ।

— காரணம்.

ஆவாஹனத்தின் முடிவில் மதுபர்க்கம் நிவேதனம் செய்ய வேண்டும். சந்தனுபிஷேகத்தின்போது மந்த்ரான்னம் நிவேதனம் செய்யவேண்டும். திருவொத்தாடை காலத்தில் சுத்தான்னம் நிவேதனம் செய்யவேண்டும். அலங்காரம் செய்து தீபாராதனை காலத்தில் விசேஷமான நிவேதனங்கள் நிவேதனம் செய்யவேண்டும். — காரணுகமம்.

1. கந்ததைலம் அல்லது நல்லெண்ணே. 2. பச்சரிசி மாவு, 3. நெல்லிமுள்ளி, 4. மஞ்சள்பொடி, 5. ஜலத்திரவியம், 6. பஞ்சகவ்யம், 7. பஞ்சாமிருதம், 8. நெய், 9. பால், 10. தயிர், 11. தேன், 12. கருப்பஞ்சாறு, 13. சர்க்கரை, 14. பழங்கள், 15. பலோதகம், 16. இளநீர், 17. அன்னம், 18. சந்தனம், 19. கும்பம், 20. பத்ரோதகம், 21. ஸஹஸ்ரதாரை, 22. சிருங்கோதகம், 23. ரத்னேதகம், 24. குசோதகம், 25. அர்க்கியோதகம் இவ்வாறு வரிசையாக அபிஷேகம் செய்யவேண்டும். — வசனரத்னுவளி.

விலாமிச்சம்வேர், வெட்டிவேர், பச்சைக்கற்பூரம், ஏலக்காய், சந்தனம், பன்னீர், பாதரி முதலிய பரிமளவஸ்துக்களைத் திருமஞ்சன தீர்த்தத்தில் போடவேண்டும்.

பாத்யம் :- அர்க்கிய பாத்திரத்தில் ஒரு புஷ்பம் போட்டு அதில் விளாமிச்சை, சந்தனம், அருகு, வெண்கடுகு என்ற நான்கு திரவியமிட்டு, அதில் விடங்கமந்திரத்தைப் பூஜித்து அபிமந்த்ரணம் செய்யவேண்டும். பாத்தியம் பாதாம்புஜத்தில் நமோந்தமாகக் கொடுக்கவேண்டும்.

ஆசமனம் :- ஏலம், கிராம்பு, பச்சைக்கற்பூரம், நாவற்கனி, ஜாதீபலம், கோரைக்கிழங்கு இந்த ஆறு திரவியங்களையும் பாத்திரத்திலிட்டு சம்ஹிதா மந்திரத்தினுல் அபிமந்த்ரணம் செய்து முகத்திற்கு நேராக சுதாந்தமாகக் கொடுக்கவேண்டும்.

(தொடரும்)

# வீரசோழியம்

டாக்டர் செ. வை. சண்முகம் M. A., M. Litt, Phd.

(மலர் 29, இதழ் 3, பக்கம் 164 இன் தொடர்ச்சி)

## 4. வீரசோழியமும் தமிழ்மொழி வரலாறும்:

தொல்காப்பிய காலத்திற்குப் பிறகு மொழிவளர்ந்த நிலையை எவ்வாறு காட்டுகிறார் என்பதைத் தொல்காப்பிய நூற்பாவோடு ஒப்பிட்டால் நன்கு விளங்கும். இரு நூல்களுக்குமுள்ள சில வேறுபாடுகள் மொழியில் ஏற்பட்ட மாற்றத்தை விளக்கும்.

### 4. 1. எழுத்ததிகாரம்:

### 4. 1. 1. முதனிலை

தொல்காப்பியத்தைப் போலவே முதல் எழுத்து முப்பது என்று கூறினும் அம்முதலெழுத்துக்களில் வரன்முறை (distribution) கூறுவதில் மாறுபாடு காணப்படுகின்றது.
தொல்காப்பியர்

சகரக் கிளவியும் அவற்றோர் அற்றே
அஐஔ எனும் மூன்றலங் கடையே (62)

என்று சகரமெய் அ, ஐ, ஔ, என்ற மூன்று உயிரொடுவராது என்று கூறியிருக்க, பெருந்தேவனர் சகரம் எல்லா உயிரொடும் கூடி மொழிக்கு முதலாகும் (7) என்று கூறியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை) சகரம் அகரத்தோடு கூடிய ஆறு தமிழ்ச்சொற்களும்[1] (சவட்டு, சண்பை, சடை, சந்து, சமை, சமழ்ப்பு) ஏறக்குறைய 60 பிறமொழிச் சொற்களும் வந்துள்ளன. இடைக்கால இலக்கியங்களில் இன்னும் பல

---

See[1] Dr. S. V. Shanmugam, 'Some Problems in old Tamil Phonology' (forthcoming)

சொற்கள் காணப்படுவதால் சகரம் மொழி முதலாகும் என்று சேர்த்துக் கூறினர்

சைகார மொழி முதற்சொற்கள் பரிபாடலிலும் மணிமேகலை யிலும் (சையம், சைமினி, சைவம், சைதன்னியவான்) வந்துள் ளன. அவ்வாறே இடைக்கால இலக்கியத்திலும் வந்துள்ளமை யால் சைகாரமும் சேர்க்கப்பட்டுள்ளது என்பது தெளிவு.

சௌகாரச் சொற்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் காணப்பட வில்லை. இடைக்கால இலக்கியத்தில் பயின்று வந்துள்ளனவா என்பதும் தெரியவில்லை. எனினும் அவர் காலத்தில் சௌகாரச் சொற்கள் வழங்கியிருக்கலாம் என்று இந்நூற்பாவால் கருதலாம்.

ஞகரமெய்

'ஆ எ ஒ
என்னும் மூவுயிர் ஞகாரத்துரிய' (64)

என்பர் தொல்காப்பியர். பெருந்தேவனர் நான்கு உயிரொடு வரும் என்று குறிப்பிட்டாரே தவிர அவை எவையெவை என்று கூறவில்லை. உரையாசிரியர் அ, ஆ, எ, ஒ என்ற நான்கு உயிர்கள் விளக்கியுள்ளார்.

ஞகர முதன் மொழிச்சொற்கள் மூன்று (ஞமலி, ஞமன், ஞரல்) பழந்தமிழ் இலக்கியத்தில் வந்துள்ளன. எனவேதான் ஞகரம் மொழி முதலாயிற்று.

யகரமெய் ஆகாரத்தோடு மட்டுமே மொழி முதலாக வரும் என்பதைத் தொல்காப்பியர்,

'ஆவோ டல்லது யகரம் முதலாது' (65)

என்று கூறியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்திலேயே யகர முதன்மொழிச் சொற் களும் (யவனர், யவனம், யமன்) யூகார முதன் மொழிச் சொற்களும் (யூகம், யூகி, யூபம்) யோகார முதன் மொழிச் சொற்களும் (யோகம், யோசனை சிலப்பதிகாரத்திலும் மணி மேகலையிலும் [மட்டும்) வந்துள்ளன. பெருங்கதையில் யௌகார முதன் மொழி (யௌவனம்) வந்துள்ளது. எனவே புத்த மித்திரனர் யகரமெய் அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ ஆகிய ஆறு உயிர்களோடு மொழிக்கு முதலாகும் என்று சொல்லியுள்ளார்.

4. 1. 2. இறுதிநிலை.

உயிர் ஔ எஞ்சிய இறுதி ஆகும் (69)
கவவோடு இயையின் ஔவுமாகும் (70)

என்ற இரு நூற்பாவாலும் எல்லா உயிருமே மொழியின் இறுதியில் வரலாம் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். புத்தமித்திரனார்,

ஈரைந்து எழில் உயிருமே (8)

மொழிக்கு இறுதியாகும் என்று கூறியுள்ளதை உரையாசிரியர் எகர ஒகர நீங்கிய ஏனைய பத்து உயிர்களும் மொழிக்கு இறுதியாகும் என்று விளக்கியுள்ளார். அவ்விரு உயிர்களும் பழந்தமிழில் அளபெடைச் சொல்லில்தான் இறுதியாக (சோ. ஒஒ) வந்தனவே தவிர ஏனைய உயிரைப்போல மெய்யெழுத்துக்களோடு கூடி இறுதியில் வரவில்லை. பேச்சு மொழியில் அளபெடை வராததால் அவ்விரு உயிரெழுத்துக்களும் மொழியின் இறுதியில் வராது என்று குறிப்பிட்டார்போலும். பல்லவர் கால கல்வெட்டிலும் அவ்விரு உயிர்களும் இறுதியில் வரவில்லை என்பதும் அறியத்தக்கது.[3]

மெய்யெழுத்துக்களில்

ஞணநமன யரலவழள என்னும்
அப்பதினொன்றே புள்ளியிறுதி (78)

என்று எல்லா இடையின யெழுத்துக்களும் மெல்லின எழுத்துக்களில் ஙகரம் நீங்கலாக ஐந்தும் மொழிக்கு இறுதியில் வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். புத்தமித்திரனர்

ஈறும் மகர ணகரங்கள் தாமும் இடையினத்தில்
ஏறும் லகரம் ஒழிந்தைந்தும்... ... ... ... (8)

என்று மெல்லினத்தில் ண, ம, ன என்ற மூன்று மெய்யும் இடையினத்தில் வகரம் ஒழிந்த ஐந்து மெய்யும் ஆக எட்டு மெய்யெழுத்துக்களே மொழிக்கு இறுதியாகும் என்று கூறியுள்ளார்.

---

[3] Dr. T. P. Meenakshisundaram, 'A HISTORY OF TAMIL LANGUAGE' Page 118.

தொல்காப்பியர் ஞகரமெய் ஈறாக உடையது ஒரு சொல் (உரிஞ்) தான் என்று (80) கூறியுள்ளார். ஆனால், அந்தசொல்லும் பழந்தமிழில் அகநானூற்றில் மட்டுமே காணப்படுகின்றது. வேறு பிற்கால இலக்கியங்களில் காணப்படவில்லை. அவ்வாறே நகர மெய்யை ஈறாகவுடைய சொற்கள் இரண்டு என்று தொல்காப்பியர் (79) குறிப்பிட்டுள்ளார். அவற்றில் வெரிந் என்ற ஒரு சொல்லே பழந்தமிழில் காணப்படுகிறது. பிற்காலத்தில் அச்சொல் வழங்காமையால் நகரமெய்யை மெய்யீற்றில் சேர்க்கவில்லை.

'வகரக் கிளவி நான் மொழி ஈற்றது' (81)

என்று வகர ஈற்றுச்சொல் நான்கு என வரையறுத்துக் கூறினர் தொல்காப்பியர். அவற்றுள் சுட்டுச்சொற்களான அவ், இவ், உவ், என்ற மூன்றும் தொல்காப்பியர் காலத்திலேயே கூட அவை இவை, உவை என்று மாற்று வடிவத்தோடு வழங்கலாயின. பிற்காலத்தில் அவை, இவை, உவை என்ற வடிவங்களே பயிற்சியில் இருந்தன. தெவ் என்ற மற்றொரு சொல் தெவ்வு என்று பிற்காலத்தில் வழங்கியதால் வகர மெய்யும் இடைக்காலத்தில் வழக்கில் இல்லை.

## 4. 1. 3 எழுத்து மாற்றம் :

சொற்களின் ஒலிவடிவம் மாறி வந்தால் எழுத்து மாற்றமாகக் (Phonemic change) கருதப்படுகிறது.

புத்தமித்ரனர் 'அறிவு இன்றிலாதவர் சில ஒலிகளை வேறு விதமாக 'நேரிட்டு உரைப்பர்' (82) என்று தம் காலப்பேச்சு வழக்கில் காணப்பெறும் எழுத்து மாற்றத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

### 4. 1. 3. 1. ழகர ளகர மாற்றம் :

ழகரம் ளகரமாகவும் ளகரம் ழகரமாகவும் வரும் என்று குறிப்பிட்டாலும் அது ழகரம் ளகரமாக மாறியதையே குறிப்பதாகக் கொள்ளலாம். நாழி நாளியாகவும், கோழி கோளியாகவும் பேசப்படுகின்றன என்று உரையாசிரியர் விளக்கியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் பவழம் - பவளம்; கவழம் - கவளம்; துழாய் - துளாய் என்றும் வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. 9 ஆம் நூற்றாண்டு கல்வெட்டிலும்[1] இம்மாற்றம் காணப்படுகிறது.

---

[1] Dr. S. V. Shanmugam, 'Epigraphy and Tamil linguistics' in Seminar on Inscriptions, 1966, P. 87 (1968).

உரையாசிரியர் பெருந்தேவனர் இம்மாற்றம் 'கருநிலம் சுற்றின தேசத்து சிலர் வழங்குவர்' என்று குறிப்பிட்டுள்ளார். கருநிலம் சுற்றின தேசம் என்பது கருநாடகத்தை யொட்டியிருக்கிற கொங்கு நாட்டைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தற்காலத் தமிழில் கொங்கு நாட்டிலும் ழகரம் ளகரமாக உச்சரிக்கப்படுகின்றது. எனவே, இம்மாற்றம் பன்னிரண்டாம் நூற்றுண்டையொட்டித் துவங்கியிருக்கலாம் என்று கொள்ளலாம.

தனிமொழியில் ஏற்பட்ட இம்மாற்றம் புணர்ச்சியையும் பாதித்துள்ளது. எனவே, புத்தமித்திரனர் ளகரத்திற்கும் உரிய புணர்ச்சி விதிகளே ழகரத்திற்கும் கூறியுள்ளார். 15 ஆம் நூற்பாவில் ழகரளகர ஈற்றுச் சொற்கள் தகர முதன்மொழியோடு சேரும்போது டகரமாகும் என்று செல்லியுள்ளார்.

நாள் - தீமை — நாடீமை - நாட்டீமை.
பாழ் - தீமை — பாடீமை - பாட்டீமை.

இவ்வாறே 16 ஆம் நூற்பாவில் ளகரத்திற்குரிய புணர்ச்சி மாற்றங்களை அடுத்த நூற்பாவில் ழகரத்திற்கும் கூறியுள்ளார். அதாவது ளகர ழகர ஈற்றுச் சொற்கள் தகரமல்லாத வல்லின முதன் மொழி முன்னர் டகரமாகவும் மெல்லின முதன்மொழி முன்னர் ணகரமாகவும் மாறும்.

முள் - குறை — முட்குறை
தமிழ் - சொல் — தமிட் சொல்
முள் - நன்று — முண்ணன்று
தமிழ் - நன்று — தமிழனன்று

கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் கீழ் - திசை — கீட்டிசை என்று மாறி வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நெட்டெழுத்திற்குப் பிறகு வரும் ழகர மெல்லினத்திற்கு முன்னர் ணகரமாதலோடு வருமொழி மெல்லினம் கெட்டுவிடும். பட்டினப்பாலையில் சோழநாடு என்பது சோணுடு என்று இதனுல்தான் வந்துள்ளது.

சோழ - நாடு; சோழ் - நாடு; சோள் - நாடு; சோணுடு.

இவ்வாறே வாழ் - நாள் என்பது வாணுள் என்று தேவாரத்தில் மாறிவருவதும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்).

# செய்திகள்

## சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருஞானசம்பந்தர் கல்யாணமண்டபம்

## கால்கோள் விழா

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் பொதுமக்களின் வசதிக்கு உதவும் வகையில் கல்யாணமண்டபம் ஒன்று கட்டவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் திருவுளம் பற்றியருளினார்கள். அதன் விளைவாக இத்தேவஸ்தானச்சார்பில் "திருஞானசம்பந்தர் கல்யாணமண்டபம்" என்ற பெயரில் ஒரு கல்யாண மண்டபம், ஒன்றரைலக்ஷரூபாய் செலவில் கட்டத் திட்டமிடப்பட்டது. 1—3—70 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி அளவில் தமிழ்நாடு இந்து அறநிலைய அமைச்சர் மாண்புமிகு. திரு. கே. வி. சுப்பையா அவர்கள் கல்யாண மண்டபத்திற்குக் கால்கோள் விழா நிகழ்த்தினார்கள். காலை 8 மணி அளவில் பூர்ணகும்ப மரியாதைகளோடு அமைச்சர் அவர்கள் வரவேற்கப்பெற்றார்கள். தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்கள் தலைமையில் விழா தொடங்கியது. தருமையாதீனம் சென்னை சமயப்பிரசார நிலையம் வித்வான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சீகாழி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்பிதழை வாசித்துக் கொடுத்தார்கள். ஆணையர் திரு. K. S. நரசிம்மன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்திய பின்னர், தஞ்சை அறநிலையத் துணை ஆணையர் திரு. தி. ந. சிங்காரவேலு B.A., அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். பின்னர், அமைச்சர் அவர்கள் கால்கோள்விழாக் கல்வெட்டினைத் திறந்துவைத்து ஆதீனத்தின் திருக்கோயில் நிர்வாகச் சிறப்பையும், சமுதாயப் பணியையும் பாராட்டி விழாப் பேருரை நிகழ்த்தினார்கள். மேலும்,

" திருக்கோயிலுக்குவரும் வருமானத்தைக்கொண்டு திருக்கோயில் பூஜைகள், விழாக்கள் முதலியவை நல்ல முறையில் செய்யப்படவேண்டும் என்றும், பூஜை முதலியவற்றிற்குப்போக

எஞ்சியுள்ள தொகையைக்கொண்டு பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் சமுதாயப் பணிகளும் செய்யப்படவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம் என்றும், அம்முறையில் இங்கு ஒன்றரைலக்ஷரூபாய் செலவில் கட்டப்படும் "திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபம்'' பொது மக்களுக்கு நல்ல முறையில் பயன்படும்'' என்றும்கூறினார்கள்.

விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களாலும், திரு. ஆணையர் அவர்களாலும். திரு. துணை ஆணையர் அவர்களாலும் திருஞானசம்பந்தர் கல்யாண மண்டபம் கட்டப்படும் இடத்திற்கு அண்மையில், தருமையாதீனத் திருக்கோயில்கள் இருபத்தேழும் இருபத்தேழு நட்சத்திரங்களாகத் திகழ்கின்றன என்பதைக் குறிக்கும் வகையில் இருபத்தேழு தென்னம் பிள்ளைகள் வைக்கப்பெற்றன.

சீகாழி தேவஸ்தானம் திருமுறைப் பணியாளர் திரு. S. திருஞானசம்பந்தம் அவர்கள் விழாத் தொடக்கத்தில் இறை வணக்கமாகத் திருமுறைப் பாடல்களை ஓதி விழா நிறைவில் வாழ்த்துப் பாடல்களையும் பாடினார்கள். பெருமக்கள் பலர் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்

## வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா 1—2—70 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 1—2—70 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றமும், 5—2—70 வியாழக்கிழமை சகோபுரத்தில் மயில் வாகனக் காட்சியும், 9—2—70 திங்கட்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 10—2—70 செவ்வாய்க் கிழமை சித்தாமிர்தத் தீர்த்தத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமான் தீர்த்தம் கொடுத்தருளலும், கொடியிறக்கமும் நிகழ்ந்தன. இத்திருவிழா தைமாதக் கடைசிச் செவ்வாய்க் கிழமையை யிறுதிநாளாகக்கொண்டு ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானுக்கு நிகழ்த்தும் தனித்த சிறப்புடைய விழாவாக விளங்குகிறது.

இவ்விழாவையொட்டி, நாள்தோறும் மாலை 6 மணி முதல் பிரசங்க சபா மண்டபத்தில் கந்தபுராணச் சொற்பொழிவுகள்

அறிஞர் பெருமக்களால் நிகழ்த்தப்பட்டன. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களாலும், திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களாலும், நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான், திரு. வை. மு. சண்முகதேசிகர் அவர்களாலும் "அறுபடைவீடு" "முருகன் திருவவதாரம்", "பிரணவப்பொருள்", "விசுவரூப தரிசனம்", "முருகன் பெருமை", "முருகன் மறக்கருணை", "முருகனும் முசுகுந்தனும்", "கந்த விரதம்", "வள்ளித் திருமணம்" என்ற தலைப்புக்களில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

## திருக்குவளையில் நெல் மகோற்சவம்

சப்த விடங்கஸ்தலங்களில் ஒன்றாகிய திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில், சமயாசாரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க் கிழார் தந்தருளிய நெல் மலையைத் திருவாரூருக்கு அட்டித்தருமாறு ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆளிட வேண்டிக்கொண்ட நெல் மகோற்சவம் 20—2—70 வெள்ளிக்கிழமை முதல் 22—2—70 ஞாயிற்றுக்கிழமை வரை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா நாட்களில் நாள்தோறும் மாலை 6 மணி முதல் தேவார பாராயணமும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 20—2—70 வெள்ளிக்கிழமையன்று நாகப்பட்டினம் தேசிய உயர்பள்ளித் தமிழாசிரியர், தருமையாதீனப்புலவர், வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர் "சுந்தரர்" என்ற தலைப்பிலும், 21—2—70 சனிக்கிழமை திருவாரூர் உயர்பள்ளித் தமிழாசிரியர், வித்துவான். திரு. மு. இரத்தின தேசிகர் "முசுகுந்தன்" என்ற தலைப்பிலும், 22—2—70 ஞாயிற்றுக்கிழமை திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி B. A., "சுந்தரரும் குண்டையூர்க்கிழாரும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். திருவாரூர் திரு. சாம்பசிவ முதலியார் B. A. L. T., "காரைக்காலம்மையார்" என்ற தலைப்பில் இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

## பல்கலைக் கல்லூரியில்
## வில்லிபாரத விரிவியற் சொற்பொழிவு

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தில் வில்லிபாரத விரிவியற் சொற்பொழிவு கல்லூரி வழிபாட்டு மன்றத்தில் 24—2—70 செவ்வாய்க்கிழமை முதல் 26—2—70 வியாழக்கிழமை முடிய உள்ள மூன்று நாட்களிலும் பிற்பகல் 2-30 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. கல்லூரிப் பழைய மாணவரான; பட்டிமன்ற மணி: புலவர் திரு. கீரன் அவர்களால் "கண்ணளிபடாத பண்ணளி மாலையன்" "கொடைகிடந்த களம்" (கர்ணன்) "விதிக்கு விதி" என்ற தலைப்புக்களில் விரிவியற் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. கல்லூரி முதல்வர். திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் பேராசிரியர். திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும் வரவேற்புரை கூறி மாலை அணிவித்தும், நன்றியுரை கூறியும் சிறப்பித்தார்கள். செயலர். அ. கலியமூர்த்தியும், துணைச் செயலர் கி. இராசகோபாலனும் அறிக்கை படித்தும், மாணவர் சார்பில் நன்றி நவின்றும் மன்றம் சிறப்புற நிகழ உதவினர். சோமசுந்தரம் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடிச் சிறப்பித்தார். ஆதீனம் உயர்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களும் மற்றும் பலரும் வந்து சிறப்பித்தனர்.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

God has been kind enough to confer his blessing of visiting the shrine and obtain darshan of Sri Sarabeswarar, Sri Kambahareswarar and Dharmasamvarthani. The pleasure is lightened by the care and enthusiasim displayed by all those connected with the worship and maintaince here.

May the grace be with us always.

(Sd) Chandrasekher,
26—2—70.

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்,

**திரு. K. முத்துஜோதிடர்**

( சௌமியஸு பங்குனிமீ 1உ முதல் 31உ முடிய )

( 14—3—70 முதல் 13—4—70 முடிய )

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாகும். ஆரோக்கியக் குறைவு காட்டும் ஈதிபாதைகள் உண்டுபண்ணும். சுப விரயங்களும், போக்கு வரத்துச் செலவுகளும் அதிகமாகும். தெய்வத்தினிடம் பக்தி ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். தூரதேசப்பிரயாணமும், சுபகாரியங்களால் அதிகமான செலவுகளும் ஏற்படும். பரிஜனங்களால் சிரமங்கள் ஏற்படும். வைத்தியச் செலவு அதிகமாகும். வரவு செலவு சமமாகும். தெய்வசக்தி முன்னின்று காக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுன ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். விசேஷமான தான்ய விருத்தியைத்தரும். நஷ்டமான பொருள் வந்துசேரும். புதிதாகத் தொழில் ஏற்படும். தூரதேசத்திலிருந்து அழைப்புப் பத்திரம் வரும். ஜீவனம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வாழ்க்கையில் பல மாறுதல்களைக்காட்டும். கிரயவிக்கிரயங்கள் விசேஷமாக ஏற்படும். சுபசோபனுதிகள் மூலம் புதிதாக வஸ்திராபரணச்சேர்க்கை ஏற்படும். தெய்வசக்தி பிரகாசிக்கும். ஜீவனம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼**

சிம்ம ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். உத்தியோகத்தில் மேல்பதவி ஏற்படும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும். உறவினர்களின் சேர்க்கையும், நஷ்டமான பொருளும் கிடைக்கும். ஆரோக்கியம் தரும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½**

கன்னியா ராசி 9 பாதங்களும் பூர்ணமாக மிச்சிரமான பலனைத்தரும். தனதான்யவிருத்தி ஏற்படும். வரவு செலவு சமமாகும். வைத்தியச் செலவு அதிகமாகும். அடிக்கடி மனம் சஞ்சலமடையும். புதிதாக சில ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் வந்துசேரும். வியவகாரம் ஜயிக்கும். தெய்வசக்தி முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**7. துலாம் - சித்திரை ½ சுவாதி - விசாகம் ¾**

துலா ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். ஜீவனம் ஓங்கும் எதிர்பாராத லாபங்கள் கிடைக்கும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். புதிதாக ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். தெய்வசக்தி பிரகாசிக்கும். புதிதாக வஸ்திரங்கள், ஆபரணங்கள் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை.**

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிரமானபலனைத்தரும். ஆரோக்கியம் உண்டுபண்ணும். தொழில் ஓங்கும். வம்சம்

விருத்தியாகும். புத்திராதிகளால் நன்மை ஏற்படும். கீர்த்தி ஓங்கும். அடிக்கடி சஞ்சாரங்கள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர் ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். ஜீவனம் ஓங்கும். ஆரோக்கியம்தரும். மேலோர் பெரியோர் களின் உதவியால் சகலமும் சுலப சாத்தியமாகும். புத்திராதி களால் நன்மை உண்டாகும். குடும்பம் ஓங்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

10 மகரம் - உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$.

மகர ராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையேதரும். உத்தியோகத்தில் மேல் பதவி கிடைக்கும். ஆரோக்கியம் தரும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமும் சாத்தியமாகும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும். பிரயாணங்கள் அதிகமாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். புதன், வியாழன் சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வியாதி குணம் ஏற்படும். குடும்பம் ஓங்கும். வரவு செலவு சமமாகும். புதிதாக தொழில் மூலம் நன்மை ஏற்படும். வைத்தியச் செலவு இருக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$, - உத்திரட்டாதி - ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வித்யை விருத்தியாகும். குடும்பம் ஓங்கும். கிரயவிக்ரயங்கள் ஏற்படும். புதிதாக வீடு வாங்க நேரிடும். சுபங்கள் ஏற்படும். தெய்வ பலத்தால் சகலமும் சுலபமாக சாத்தியமாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

குறிப்பு :— மேற்படி பங்குனிமாதம் முதல் தேதியன்று ஸ்ரீசூரியபகவான் பகல் 16-56 நாழிகைக்கு மீன ராசி பிரவேசம்

செய்கிறார். அத்துடன் 17உ முதல் 26உ முடிய மேஷ ராசியிலும், சனி, செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஐந்து கிரகங்களும் குருவுக்கு 7 இல் சஞ்சாரம் ஏற்படுகின்றது. இதற்கு உலக க்ஷேமார்த்தமாக உலகை உண்டுபண்ணின கடவுளே பூமியில் இந்தசமயம் அவதாரம் செய்து, கிரிமிகீடம் முதல் பிரம்மபரியந்தம் காப்பாற்ற கருணைபுரிய சகல உத்தம பிரஜைகளும் பிரார்த்திக்கவேணும். மேற்படி பங்குனிமாதம் 25உ மங்களவாரம் வசந்த நவராத்திரி ஆரம்பம். தெலுங்கு வருஷப்பிறப்பு. மேலும் கீழும் போகமுடியாமல் மாட்டிக் கொண்டு கடவுளை நம்பினவர்கள் தனக்கு ஏற்படும் கடவுள் சோதனையை மறந்து, சதா சர்வேசுவரனைத் தியானித்துக் கொண்டு மனதை சமாதானம் செய்துகொண்டு தன் கடமைகளை விடாமல் சிரத்தையாய் நடத்திக்கொண்டுவர கடவுள் காப்பார். சுபமுண்டாகும்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Sattanathaswami Devasthanam. Sirkazhi

" I was greatly impressed by the didicated work the staff and management of the Mutt are doing in the temple. The premises are very neat and tidy. The archakas are very dovoted in the performance of the poojas and the pilgrims are naturally very much inspired. All devotees must help in the noble task of renovating the temple.

Sd ) C. R. Ramamurthy,

3-3-70

Project Engineer.

Madras Atomic Power Project.

உ

குருபாதம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

## சிறப்புத் திருநாள் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 17—5—70 | ஞாயிறு | துவஜாரோகணம். |
| 21—5—70 | வியாழன் | சகோபுரரிஷபவாகனக்காட்சி. |
| 23—5—70 | சனி | திருக்கல்யாணம் வெள்ளிரதக் காட்சி. |
| 25—5—70 | திங்கள் | திருத்தேர். |
| 26—5—70 | செவ்வாய் | காவிரியில் பஞ்சமூர்த்திகள் தீர்த்தம்கொடுத்தல்: துவஜாவரோகணம். |

26—5—70 செவ்வாய்க்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

**குருபூஜை விழா**

27—5—70 புதன்கிழமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின்

**பட்டணப்பிரவேசம்**

17—5—70 முதல் 27—5—70 முடிய

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

# ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.



உ

குருபாதம்

## ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொணடு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு நிகழும் சாதாரண ஆண்டு வைகாசித்திங்கள் 3 ஆம்நாள் (17—5—70) ஞாயிற்றுக்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் " திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு " நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும், சொறபொழிவுகளைக் கேட்டும் இன்புறுக

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்

தருமையாதீன
மடாலயம்
சாதாரண-சித்திரை

**சொக்கநாதத் தம்பிரான்.**

---

ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6 மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும், பூசை மடத்தில் காலை 10 மணி முதல் சித்தாந்தப் பாட வகுப்பும் நடைபெறும்

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில், சைவ வேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சி யம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து, மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்ந்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று, ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று, 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும், சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம்

வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன் ஆங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க' என்று சொல்லி உட்சென்றுர். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றுர். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்விச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினர். அது கேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞானநூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

உ

# திருநாள் விபரம்

| தமிழ் ஷ மீ௳ | இங்கிலீஷ் ஷ மீ௳ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
| --- | --- | --- | --- | --- |
| 2 | 16—5—70 | ஸ்திரவாரம் | | காலை கணபதி ஹோமம். உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 36-00 நாழிகைக்கு மேல் 37-30 நாழிகைக்குள் (மாலை மணி 8-20 to 9) விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை. விக்னேசுவரபூஜை. வாஸ்து சாந்தி. மிருத்ஸங்கிரஹணம். அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். |
| வைகாசிமீ 3 | 17—5—70 | பானுவாரம் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 0-35 நாழிகைக்குமேல் 4-45 நாழிகைக்குள் (காலை மணி 6-15 to 7-45) ரிஷபலக்னத்தில் ஸ்ரீ ஞானும்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 4 | 18—5—70 | சோமவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 5 | 19—5—70 | மங்களவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | 20—5—70 | புதவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| 7 | 21—5—70 | குருவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| 8 | 22—5—70 | சுக்கிரவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி |
| 9 | 23—5—70 | ஸ்திரவாரம் | 7 | இரவு மணி 6-00 க்குமேல் 7-45க்குள் விருச்சிக லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக் காட்சி. |
| ஸ்ரீ சாதாரண 10 | 24—5—70 | பானுவாரம் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| 11 | 25—5—70 | சோமவாரம் | 9 | காலை (மணி 10-00 to 11-00) கடக லக்னத்தில் மஹா ரதாரோகணம்; திருத்தேர். |
| 12 | 26—5—70 | மங்களவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| 13 | 27—5—70 | புதவாரம் | | மௌன உற்சவம். |
| 14 | 28—5—70 | குருவாரம் | | சண்டேசுவரர் உற்சவம். |

உ

குருபாதம்

# சித்தாந்தப் பாட வகுப்பு

## “ திருவருட்பயன் ”

17—5—70 முதல் 26—5—70 முடிய

காலை 10 மணிமுதல் 12 மணிவரை நடைபெறும்.

நடத்துபவர் :-

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி,
மகாவித்துவான்,
**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
பேராசிரியர்,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

முதல் திருநாள் 17—5—70 ஞாயிற்றுக்கிழமை

மாலே 6-மணிமுதல்

**கவியரங்கம்**

பொருள் :-

"வழிவழி வந்த மரபு"

தொடக்கவுரை :

**திரு. K. S. நரசிம்மன் B. A., B. L., I. A. S.**
இந்து சமய அறநிலேய ஆட்சித்துறை ஆணேயர்.

கவிஞர்கள் :-

**திரு. முடியரசன்**
காரைக்குடி.
"நக்கீரர்"

**புலவர், திரு. ந. செகதீசன் (தமிழன்பன்)**
ஈரோடு.
"கபிலர்"

**திரு. அப்துல்ரகுமான் M. A.,**
இஸ்லாமியா கல்லூரி, வாணியம்பாடி.
"திருவள்ளுவர்"

**வித்துவான். திரு பூ. அமிர்தலிங்கம் M. A.,**
தமிழ் விரிவுரையாளர், அழகப்பா கல்லூரி, காரைக்குடி.
"அப்பர்"

செஞ்சொற்கொண்டல்,
**வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன் M. A.,**
தமிழ் விரிவுரையாளர். அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.
"மெய்கண்டார்"

**வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீனம்.
"குருஞானசம்பந்தர்"

இரண்டாந் திருநாள் 18—5—70 திங்கட்கிழமை

மாலை 6 மணிமுதல்

## பட்டிமன்றம்

தொடக்கவுரை :

திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் B. A., B. L.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

நடுவர் :–

திரு. க. கு. கோதண்டராமன் M. L. C.
ஈரோடு.

புறநானூற்றில் விஞ்சி நிற்கும் பண்பு
வீரமா ? அறமா ?

| வீரமே ! | அறமே ! |
| --- | --- |
| திரு. அறிவழகன் M. A., M. L. C. சென்னை. | புலவர், திரு. க முருகையன் M. L. A. தஞ்சாவூர். |
| திரு. ஞானசுந்தரம் M. A. சென்னை. | புலவர் திரு ஒ. அறிவுடைநம்பி M, L. C' கடலூர் |
| வித்துவான் திருமதி.துரை.வள்ளி. அரசினர் மகளிர், உயர்பள்ளி மாயூரம். | வித்துவான். திருமதி. ப. நீலா ஆதினப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம். |

## இன்னிசை

லால்குடி, திரு. ஜெயராமன் }
திருமதி, ஸ்ரீமதி பிர்மானந்தம் } பிடில்

உமையாள்புரம் திரு. சிவராமன்–மிருதங்கம்.

மூன்றும் திருநாள் 19—5—70 செவ்வாய்க்கிழமை

மாலை 6–மணிமுதல்

## பட்டிமன்றம்

நடுவர் :

பன்மொழிப்புலவர்
திரு. கா அப்பாத்துரை M. A.,
தமிழக ; } , சென்னை.

பொருள் :-

திருக்குறளில் வள்ளுவர் காட்டும் நெறி
இம்மையா ? மறுமையா ?

| இம்மையே ! | மறுமையே ! |
|---|---|
| பேராசிரியர், **டாக்டர். திரு. மே. சுந்தரம்** M. A. M. Litt., PhD., மாநிலக்கல்லூரி, சென்னை. | **டாக்டர் திரு. தமிழண்ணல்** M. A., PhD., தியாகராசர் கல்லூரி, மதுரை. |
| **புலவர் திரு. சோம இளவரசு** அண்ணாமலைப் பல்கலைக் கழகம். | பேராசிரியர், பாவலரேறு **திரு. ச. பாலசுந்தரம்** புலவர் கல்லூரி, கரந்தை. |
| வித்துவான். **திரு. இரா. செல்வக்கணபதி** சென்னை. | **திருமதி. சாரதாநம்பியாரூரன்** மேரி அரசி கல்லூரி, சென்னை. |

நான்காம் திருநாள் 20—5—70 புதன்கிழமை

மாலை 6–மணிமுதல்

## பட்டிமன்றம்

நடுவர் :

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்
**வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனர்**
துணைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

பொருள் :

திருமுறையைச் சிவபெருமான் பெரிதும்விரும்பிக்
கேட்பதற்குக்காரணம்
புகழ் வேட்பா ? உயிர்கள் உய்விற்கா ?

| புகழ்வேட்பே! | உயிர்கள் உய்விற்கே! |
|---|---|
| பேராசிரியர், திரு. பா. நமசிவாயம் M. A., திருப்புத்தூர். | பேராசிரியர், திரு. அ. சங்கரநாராயணன் M.A., M. Lit. B. T. தியாகராசர் கல்லூரி,, மதுரை. |
| திரு அ.வ.இராசகோபாலன் M.A., தமிழ் விரிவுரையாளர், புத்தனும்பட்டி, திருச்சி. | திரு. அ. கலியபெருமாள் M. A., தமிழ் விரிவுரையாளர் அ. வ. அ. கல்லூரி, மாயூரம். |
| வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம். | திருமதி. சரசுவதி இராமநாதன் M. A.' சீதாலட்சுமி ஆச்சி கல்லூரி, பள்ளத்தூர். |

ஐந்தாம் திருநாள் 21—5—70 வியாழக்கிழமை

மாலை 6-மணிமுதல்

## பட்டிமன்றம்

நடுவர்:

திரு. அ. நடேச முதலியார்
கடலூர்.

பொருள்:—

சாத்திரங்களில் ஆன்ம ஈடேற்றத்திற்கு
இன்றியமையாதது

விதிமுறையா? பக்தி முறையா?

| விதிமுறையே! | பக்திமுறையே! |
|---|---|
| திரு. வை. இரத்தினசபாபதி M.A. மெய்ப்பொருள்துறை அண்ணுமலைப் பல்கலைக்கழகம். | திரு. சி. இராமலிங்கம் M. A., மெய்ப்பொருள்துறை அண்ணுமலைப் பலகலைக்கழகம். |
| வித்துவான் திரு. M. சுந்தரேசம் பிள்ளை செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள். | திருமதி. தி. சுந்தராம்பாள் M. A., செந்திற்குமார நாடார் கல்லூரி, விருதுநகர். |

ஆரும் திருநாள் 22—5—70 வெள்ளிக்கிழமை

மாலை 6–மணிமுதல்

## உரையரங்கம்

ஆசையறுய்: என்ற சிவபோகசாரப் பாடல் விளக்கம்

தொடக்கவுரை :–

**மாண்புமிகு. திரு. மாதவன்**

சட்டம், நீதித்துறை அமைச்சர், தமிழக அரசு.

தலைமையுரை :–

திருவண்ணுமலை ஆதீனம், குன்றக்குடி மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

( குன்றக்குடி அடிகளார் M. L. C., )

சிறப்புரை :–

காஞ்சிபுரம், தொண்டைமண்டல ஆதீனம், மகாசந்நிதானம்,

**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

" சிவபூசை பண்ணுய் "

தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைச்செல்வர்.

**திரு. க. வச்சிரவேல் முதலியார்** B. A., L. T.,

திருவாவடுதுறை ஆதீனம்.

" ஆசையறுய் பாசம்விடாய் "

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

தமிழ்ப் பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி. தருமபுரம்.

" ஐந்தெழுத்தை நீ நினையாய் "

தருமையாதீனப் புலவர், பாலகவி, வயிநாகரம்,

**திரு. வே. இராமநாதஞ் செட்டியார்**

தேவகோட்டை.

" சினமேதவிராய் "

சைவசித்தாந்தப் புலவர்மணி,

**திரு. N. R. முருகவேள் M. A.,**

சென்னை.

" திருமுறைகள் ஓதாய் "

ஏழாம் திருநாள் 23—5—70 சனிக்கிழமை

மாலை 6–மணிக்கு

## பட்டிமன்றம்

நடுவர் :–

காரைக்குடி.

**திரு. சா. கணேசன்**

பொருள் :–

இதிகாசங்களில் சகோதரபாசம் விஞ்சி நிற்பது
கம்பராமாயணமா? வில்லிபாரதமா?

| கம்பராமாயணமே ! | வில்லிபாரதமே ! |
|---|---|
| திரு. சோ. சத்தியசீலன் M.A.B.T.<br>தேசீயக் கல்லூரி, திருச்சி. | புலவர். திரு. மு. இராமசாமி<br>தமிழாசிரியர், இராசிபுரம். |
| வித்துவான் திரு அ. அருணகிரி<br>தமிழாசிரியர், பாண்டிச்சேரி. | புலவர். என். கே. இராமராசன்<br>கண்டர் கல்லூரி, சேலம்வேலூர் |
| வித்துவான். திருமதி. ப. நீலா<br>தருமையாதீனப்<br>பல்கலைக் கல்லூரி. | வித்துவான் திருமதி பத்மா,<br>மாயூரம். |

எட்டாம் திருநாள் 24—5—70 ஞாயிற்றுக்கிழமை

மாலை 6–மணிமுதல்

## கருத்தரங்கம்

பொருள் :–

குருஞானசம்பந்தர் வாழ்வில்:–

தலைவர் :–

**மாண்புமிகு. திரு. புலவர். கா. கோவிந்தன் M. A.,**
சட்டப் பேரவைத் தலைவர், தமிழ்நாடு அரசு.

திருவாசகமணி,
திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,
"அரசு நிலை"

தருமையாதீனப் புலவர்,
திரு. ச. தண்டபாணி தேசிகர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
"சமய நிலை"

பாலூர். திரு. து. கண்ணப்ப முதலியார் M. A., B. O. L.,
சென்னை.
"மக்கள் நிலை"

திரு. ஔவை. து. நடராசன் M. A,
சென்னை.
"மொழிநிலை"

ஒன்பதாம் திருநாள் 25—5—70 திங்கட்கிழமை
மாலை 6-மணிமுதல்

கருத்தரங்கம்

பொருள் :-

திருக்கோயில்களில் :—

செந்தமிழ்ச் செல்வர்,
திரு. கி. வா. ஜகந்நாதன் M. A.,
ஆசிரியர், கலைமகள், சென்னை.
"பண்பாடு"

திரு. கணபதிஸ்தபதி
மாமல்லபுரம்.
"கட்டிடக்கலை"

பேராசிரியர்.

**திரு. ச. அகத்தியலிங்கம் M. A., PHD. (கேரளா)**
P. HD. (இந்தியானு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

"வரலாறு"

**திரு. இரா. நாகசாமி M. A.,**
தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர், தமிழக அரசு.

"நுண்கலைகள்"

பத்தாம் திருநாள் 26—5—70 செவ்வாய்க்கிழமை

காலையில்

## சித்தாந்தப் பாட வகுப்பு நிறைவு

தலைவர் :-

திருக்குறள்வேள்,
**திரு. ஜி. வரதராசப் பிள்ளை B. A.**

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி,
மகாவித்துவான்,
**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
பேராசிரியர், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

தருமையாதீனப் புலவர்,
**வித்துவான். திரு. வை. மு. சண்முக தேசிகர்**
தேசீய உயர்பள்ளி, நாகப்பட்டினம்.

"ஞானப்ரகாசமாலை"

**வித்துவான். திரு. கோ. முருகையன்**
பொள்ளாச்சி.

"சொக்காத வெண்பா"

**வித்துவான். சிரோமணி. திரு. வி. சபேசன்**
ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

"நவரத்நமாலை"

26—5—70 செவ்வாய்க்கிழமை

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

# குருபூஜை விழா

காலையில்

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழா மலர் :

## ( பத்தாந் திருமுறை ) திருமந்திரம்

மாலையில்

கனகாபிஷேகம் கொண்டருளிய

**ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்**

காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த வழிபாடு செய்தருளல்.

பட்டணப்பிரவேசத் திருநாள் 27—5—70 புதன்கிழமை

காலையில்

பொருள் :–

" அருள் நூல்கள் "

தலைமையுரை :–

**மாண்புமிகு. திரு R. சதாசிவம் B. A., M. L.,**

உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

சிவநெறிச்செல்வர்

**வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா M.A., B. O. L.**

செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

" முத்தி நிச்சயம் "

வித்துவான் திரு. மு. இரத்தின தேசிகர்
திருவாரூர்

"சோடசகலாப் பிராசாத ஷட்கம்"

வித்துவான் திரு. தி. பட்டுசாமி ஓதுவார்
திருச்சி.

"ஸ்ரீ சிவஞான தேசிகர் அருளிய அருட்பா"

27—5—70 புதன்கிழமை

காலையில்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

*

நண்பகல்

மாகேஸ்வரபூஜை

*

மாலையில்

இன்னிசை

*

இரவு

பட்டணப்பிரவேசம்